முச்சந்தி முரளி



"இப்பிடியே பிடுங்குப்படுறதில மட்டும் எங்கட ஆக்கள் கெட்டிக்காரர் பாருங்கோ"

Registered as a Newspaper

பக்கங்கள் – 12

விலை – ரூபா 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 309

திங்கட்கிழமை
30 செப்ரெம்பர் 2024

புரட்டாதி 14 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

# பொதுச் சின்னத்தில் களமிறங்கத் தயார்!!!

## இந்தியத் தூதுவருக்கும், தமிழரசுக் கட்சிக்கும் கூட்டணியினர் இன்று எடுத்துரைப்பர்

**யாழ்ப்பாணம், செப்ரெம்பர் 30**

**எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக, இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வீட்டுச் சின்னத்தில் போட்டியிட வருமாறு விடுத்த அழைப்புத் தொடர்பில் பரிசீலிக்கும் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியினர், பொதுச் சின்னத்தில் ஒன்றிணைந்து போட்டியிடவே தயார் என்று பதிலளிக்கவுள்ளதாகத் தெரியவருகின்றது. இது தொடர்பில் இன்றைய தினம் இலங்கைக்கான இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜாவுக்கும் அவர்கள் எடுத்துரைப்பார்கள் என அறியமுடிகின்றது.**

☞ 11

## 13,309 மாணவர்களுக்கு 9 'ஏ' பெறுபேறு

கொழும்பு, செப். 30
2023 ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சையில் 13 ஆயிரத்து 309 மாணவர்கள் அனைத்துப் பாடங்களிலும் 'ஏ' சித்தி பெற்றுள்ளனர் என்று பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

☞ 11

சாதாரணதரப் பரீட்சைப் பெறுபேறு

## வடக்கில் வேம்படி முன்னிலை 110 மாணவிகளுக்கு 9'ஏ'

யாழ்ப்பாணம், செப். 30
2023 ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை முன்னிலை பெற்றுள்ளது. அந்தப் பாடசாலையின் 110 மாணவிகள் 9 'ஏ' பெறுபேறு பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

☞ 11

## சங்குச் சின்னத்தை பயன்படுத்தாதீர்!

தமிழ் மக்கள் பொதுச்சபை கோரிக்கை

திருகோணமலை, செப். 30
எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ் மக்கள் பொதுச்சபை நேரடியாகப் பங்கேற்காது எனவும், பொது வேட்பாளரால் பயன்படுத்தப்பட்ட சங்குச் சின்னத்தை இந்தத் தேர்தலில் பயன்படுத்துவதைத் தவிர்க்குமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

☞ 11

## தமிழரசுக் கட்சியினரின் மனோபாவம் மாறவில்லை

சித்தார்த்தன் தெரிவிப்பு

வவுனியா, செப். 30
இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அறிவிப்பிலேயே அவர்களின் ஆதிக்கம் வெளிப்படுகின்றது. வந்து சேருங்கள். நாங்கள் பார்த்துத் தருகின்றோம் என்ற

☞ 11

## சங்குச் சின்னம் கூட்டணி வசம்?

யாழ்ப்பாணம், செப். 30
ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி சங்குச் சின்னத்தை தமக்கு ஒதுக்குமாறு விடுத்த கோரிக்கையை தேர்தல்கள் ஆணைக்குழு ஏற்றுக்கொண்டுள்ளதாகத்

☞ 11

## ஆடுகளும், குட்டியும் விஷம் வைத்துக்கொலை!

பூநகரியில் கொடூரம்

கிளிநொச்சி, செப். 30
பூநகரியைச் சேர்ந்த ஒருவரின் வாழ்வாதாரத்துக்கான 11 ஆடுகளும் குட்டி ஒன்றும் நேற்றுமுன்தினம் மாலை உயிரிழந்துள்ளன.
ஆடுகள் மேய்ச்சலுக்கு தனியார் ஒருவரின் காணிக்குள் சென்றுள்ளன. அங்கு ஆடுகள் பருகிய தண்ணீருக்குள் இரசாயன உரம் கலக்கப்பட்டுள்ளது. இதனையடுத்து அதனைப் பருகிய ஆடுகளும்,

☞ 12

## தேர்தல் காலங்களில் மட்டும் 300 'பார்' லைசென்ஸ்

விசாரணை நடத்துமாறு ஜனாதிபதி கட்டளை

கொழும்பு, செப். 30
கடந்த அரசாங்கம் ஜனாதிபதித் தேர்தலை இலக்கு வைத்து 300 க்கும் மேற்பட்ட மதுபானசாலை அனுமதிப்பத்திரங்களை வழங்கியுள்ளதாகவும் அவற்றை உடனடியாக இரத்துச் செய்

☞ 11

## மஹிந்தவின் பாதுகாப்பு நீக்கம்

கொழும்பு, செப். 30
முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவுக்கு வழங்கியிருந்த சிறப்பு அதிரடிப்படையினரின் பாதுகாப்பை

☞ 12

## மாணவனைத் தாக்கிய ஆசிரியர் கைது

யாழ்., செப். 30
இருபாலையிலுள்ள தனியார் கல்வி நிலையத்தில் கற்பிக்கும் ஆசிரியர், அங்கு பயிலும் 14 வயது மாணவன் மீது மோசமான தாக்குதலை நடத்திய குற்றச்சாட்டில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

☞ 11

பொதுவேட்பாளருக்காக

## குத்துவிளக்கு கூட்டணியினர் அர்ப்பணிப்புடன் செயலாற்றவில்லை

குற்றம்சாட்டுகிறார் விக்னேஸ்வரன்



யாழ்ப்பாணம், செப். 30
மருத்துவ சிகிச்சைக்கு நடுவிலும் தமிழ்த் தேசியத்தை முன்னிறுத்தும் வேட்பாளர் மக்களின் ஏகோபித்த ஆதரவைப் பெற வேண்டும் என்பதற்காகப் பாடுபட்டேன். ஆனால், குத்துவிளக்கை மையமாக வைத்துச் செயற்பட்டு வரும் கட்சிகளிடையே அதைக் காணவில்லை. அவர்களின் மனோநிலையைப் புரிந்துகொண்டதால்

☞ 11

## வீட்டை ஒற்றுமைப்படுத்திவிட்டு கூட்டுக்கு அழைப்பு விடுங்கள்!

சுமந்திரனுக்கு சிறீகாந்தா பதிலடி

யாழ்ப்பாணம், செப். 30
முதலிலே தமிழரசுக் கட்சிக்குள் ஒற்றுமைப்பட முடியாதவர்கள் ஒற்றுமைக்கான அழைப்பை புன்முறுவலோடு விடுப்பது ஒட்டுமொத்த தமிழர்களையும் ஏமாற்றும் செயலாகும் - இவ்வாறு தமிழ்த் தேசியக்

☞ 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மாற்றத்துக்கான இளையோரை நாட்டுக்காகத் தெரிவுசெய்யுங்கள்

- கிளிநொச்சியில் கலந்துரையாடல்
- 7 பேர் கொண்ட குழு அமைப்பு

**கிளிநொச்சி, செப்.30**

**நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் பதிவுசெய்யப்பட்ட கட்சிகள், இளைஞர்களுக்கும் புதிய முகங்களுக்கும் வாய்ப்பளிக்கவேண்டும் என்ற நிலைப்பாட்டுக்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் கிளிநொச்சியில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றுள்ளது.**

"மாற்றத்துக்கான இளையோர்" எனும் தொனிப்பொருளில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றது.

கலந்துரையாடலில், யாழ்ப்பாணம், வன்னித் தேர்தல் மாவட்டங்களிலிருந்து இளைஞர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

இதன்போது சுயேச்சையாக இளைஞர்களைத் தேர்தலில் போட்டியிட வேண்டும் என இளைஞர்களால் வலியுறுத்தப்பட்டது.

இளைஞர்களை ஒன்றுதிரட்டி மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான பணிகளை முன்னெடுக்க 7 பேர் கொண்ட குழு உருவாக்கப்பட்டதுடன், கட்சிகளுக்கு இளைஞர்களை உள்வாங்க அழுத்தம் கொடுப்பது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

இதுகுறித்து அந்தக் குழுவின் செயலாளர் அந்தோனிமுத்து ஜெயாளன் தெரிவிக்கையில்,

வடக்கு மாகாணத்தில் இளைஞர்களை ஒன்று திரட்டி இளம் தலைவரை தெரிவுசெய்யவேண்டும். அதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன - என்றார். (ச-113)



# 'யானை' மறைவு

கொழும்பு, செப். 30

இலங்கை அரசியல் வரலாற்றில் பொதுத் தேர்தலொன்றின்போது 'யானை' சின்னம் இல்லாமல் நடைபெறும் முதல் தேர்தலாக இம்முறை தேர்தல் அமையவுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்கிய தரப்பினர் பொதுச்சின்னமொன்றில் தேர்தலை எதிர்கொள்வதற்குத் தயாராகிவருகின்றனர். பெரும்பாலும் காஸ் சிலிண்டர் சின்னத்திலேயே களமிறங்கக்கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கையில் 1947 ஆம் ஆண்டிலேயே முதலாவது நாடாளுமன்றத் தேர்தல் நடைபெற்றது. அந்தத் தேர்தலில் யானைச் சின்னத்தில் போட்டியிட்டு ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியையும் பிடித்தது. 1952, 1956, 1960, 1965, 1970, 1977, 1989, 1994, 2000, 2001, 2004 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற தேர்தல்களிலும் யானைச் சின்னத்திலேயே ஐக்கிய தேசியக் கட்சி போட்டியிட்டது.

2010, 2015 பொதுத்தேர்தல்களின் போது கூட்டணி அமைத்து ஐ.தே.க. களமிறங்கி இருந்தாலும் யானைச்சின்னமே முன்னிலைப்படுத்தப்பட்டது. 2020 பொதுத்தேர்தலின்போதுகூட யானை சின்னத்திலேயே வந்திருந்தது.

இந்த நிலையில் இம்முறை 'யானை' சின்னத்தை கைவிட்டு பொதுச்சின்னத்தில் களமிறங்கும் முடிவுக்கு ஐக்கிய தேசியக் கட்சி வந்துள்ளது. (ச-44)

# நிமால் நீக்கம்



கொழும்பு, செப். 30

அரசமைப்புப் பேரவையில் ஜனாதிபதியின் பிரதிநிதியாகச் செயற்பட்ட முன்னாள் அமைச்சர் நிமால் சிறிபாலடி சில்வா அப்பதவியில் இருந்து நீக்கப்பட்டுள்ளார்.

அதற்குப் பதிலாக ஜனாதிபதியின் பிரதிநிதியாக அமைச்சர் விஜித ஹேரத் நியமிக்கப்பட்டுள்ளார்.

அரசமைப்புப் பேரவையின் தலைவராக சபாநாயகரே செயற்படுவார். பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோரும் அதில் அங்கம் வகிப்பார்கள்.

நாடாளுமன்றம் கலைக்கப்பட்டாலும் புதிய நாடாளுமன்ற அமர்வு ஆரம்பமாகும்வரை அரசமைப்புப் பேரவை செயற்படமுடியும். உயர்பதவிகளுக்கான நியமனங்களை அரசமைப்புப் பேரவையே அங்கீகரிக்கும். இந்த நிலையிலேயே அரசமைப்புப் பேரவையில் இருந்து நிமால் சிறிபால டி சில்வா நீக்கப்பட்டுள்ளார்.

ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சிக் காலத்தில் ஜனாதிபதியின் பிரதிநிதியாக நிமால் சிறிபால டி சில்வா செயற்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-44)

# பாதுகாப்பை உறுதிசெய்க

*முன்னாள் ஜனாதிபதி ரணில் கோரிக்கை*

கொழும்பு, செப்.30

தனது பாதுகாப்புக்காகப் பாதுகாப்புப் பிரிவொன்றை ஸ்தாபிக்குமாறு ரணில் விக்கிரமசிங்க கோரிக்கை விடுத்துள்ளார்.

புதிய ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் செயலாளருக்குக் கடிதமொன்றினை அனுப்பி இந்த விடயத்தை அவர் தெரிவித்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் ரணில் விக்கிரமசிங்கவால் 163 பாதுகாவலர்கள், 15 சமையல்காரர்கள், 6 மருத்துவ அதிகாரிகள், ஒரு கணினி மற்றும் பிரிண்டர் ஆகியவையும் கோரப்பட்டுள்ளன என்று கூறப்படுகிறது.

இதேவேளை முன்னாள் ஜனாதிபதிகளுக்கு வழங்கப்பட்ட உத்தியோகபூர்வ வாசஸ்தலங்களை அகற்றுவதாக தற்போதைய ஜனாதிபதி உறுதியளித்துள்ள சூழலில், ரணில் விக்கிரமசிங்க இந்தக் கடிதத்தை அனுப்பி வைத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ச)

# தவறுகள் இழைத்து தப்பியோடவில்லை

*கமால் தெரிவிப்பு*

கொழும்பு, செப்.30

நான் நாட்டைவிட்டுத் தப்பியோடவில்லை, எந்தவொரு தவறையும் இழைக்கவில்லை. தப்பியோடவேண்டிய அவசியமும் இல்லை என்று பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர் ஜெனரல் கமால் குணரத்ன தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி வெற்றி பெற்றதையடுத்து, பாதுகாப்புச் செயலாளராக பதவி வகித்த கமால் குணரத்ன நாட்டைவிட்டுத் தப்பியோடிவிட்டார் எனத் தகவல்கள் வெளியாகி இருந்தன. இந்த நிலையிலேயே அதனை மறுத்து, நான் தப்பியோடி இருந்தால் நாட்டில் இருந்து எப்படி உங்கள் முன்னிலையில் தற்போது உரையாற்ற முடியும்? இது நான் பிறந்த நாடு, வாழ்ந்த நாடு, இங்குதான் இறக்கவும் போகின்றேன். எனவே, நாட்டைவிட்டு ஓடமாட்டேன் என்று கமால் குணரத்ன குறிப்பிட்டுள்ளார். (ச-44)

# சஜித் – ரணில் தனிவழிகளில்



கொழும்பு, செப். 30

ஐக்கிய தேசியக் கட்சியையும், ஐக்கிய மக்கள் சக்தியையும் ஒன்றிணைத்து கூட்டணி அமைக்கும் முயற்சி தோல்வியில் முடிவடைந்துள்ளது எனத் தெரியவருகின்றது.

பொதுத்தேர்தலில் களமிறங்குவதற்கு சஜித் அணியால் முன்வைக்கப்பட்ட கடும் நிபந்தனைகளாலேயே கூட்டணி முயற்சி சாத்தியமாகவில்லை எனக் கூறப்படுகின்றது.

இதனால் பொதுத்தேர்தலில் தொலைபேசி சின்னத்தில் ஐக்கிய மக்கள் கூட்டணியாக ஐக்கிய மக்கள் சக்தி களமிறங்கவுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்கிய தரப்புகள் இணைந்து தனித்துப் போட்டியிடவுள்ளன.

இது தொடர்பான அறிவிப்பு நாளை அல்லது நாளை மறுதினம் வெளியிடப்படும் எனத் தெரியவருகின்றது. (ச-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரச வாகனப் பயன்பாடு அரசாங்கம் கிடுக்குப்பிடி

## பொதுநிர்வாக அமைச்சு சுற்றறிக்கை

**சாவகச்சேரி, செப்.30**

**அரச நிறுவனங்களுக்குச் சொந்தமான வாகனங்களில் அரச இலச்சினை, திணைக்களம் அல்லது நிறுவனங்களின் பெயர் ஆகியவற்றைப் பயன்படுத்துவது தொடர்பான சுற்றறிக்கையை மீண்டும் நடைமுறைப்படுத்துவது தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது.**

வாகனங்களைத் துஷ்பிரயோகம் செய்வதைத் தடுக்கும் வகையில் இவ்வாறு கவனம் செலுத்தப்பட்டுள்ளது. 2002 ஆம் ஆண்டு வாகனங்களுக்கு அரச இலச்சினை மற்றும் சம்பந்தப்பட்ட அரச நிறுவனத்தின் பெயரைப் பயன்படுத்துவதற்காக வெளியிடப்பட்ட சுற்றறிக்கையில் அறிவுறுத்தல்கள் முறையாக பின்பற்றப்படவில்லை எனக் கண்டறியப்பட்டுள்ளது.

இதற்கமைய, அரச இலச்சினையுடன் அமைச்சு, திணைக்களம் அல்லது நிறுவனத்தின் பெயரும் குறிப்பிடப்படவேண்டும் என திருத்தப்பட்ட சுற்றறிக்கையில் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ச)





# கன்றுத்தாச்சிப் பசுவை வெட்டியவர்கள் கைது

யாழ்ப்பாணம், செப்.30

கன்றுத்தாச்சிப் பசுவை வெட்டிய குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட மூவரை விளக்கமறியலில் வைக்குமாறு மல்லாகம் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது. நேற்றுமுன்தினம் சனிக்கிழமை அதிகாலை பென்னாலை கிருஷ்ணன் கோயிலுக்கு பின்புறம் உள்ள புதர் ஒன்றினுள் வைத்து, 5 மாதங்கள் நிறைந்த கன்றுத்தாச்சி பசுமாடு இறைச்சிக்காக வெட்டப்பட்டுள்ளது. இதுதொடர்பில் வட்டுக்கோட்டை பொலிஸாருக்கு வழங்கப்பட்ட தகவலையடுத்து மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் மூவர் கைதுசெய்யப்பட்டு மல்லாகம் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டபோது சந்தேகநபர்களை எதிர்வரும் 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டது. (ச-45-27)

# இலஞ்ச ஊழல் அதிகாரி மாட்டினார்

கொழும்பு, செப்.30

சட்டவிரோதமாக மதுபான விற்பனைக்கு அனுமதி வழங்கியமை தொடர்பில் குற்றஞ்சாட்டப்பட்ட மதுவரித்திணைக்களத்தின் அதிகாரி ஒருவர் வெளிநாட்டுக்குத் தப்பிச்செல்ல ஆயத்தமாகிய வேளை மாட்டிக்கொண்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது. இலஞ்சம் பெற்று தனக்கு நெருக்கமானவர்களுக்கு மதுபானவிற்பனைக்கான அனுமதிப்பத்திரங்களை குறித்த அதிகாரி வழங்கியதாக தெரிவிக்கப்படுகிறது. புதிய அரசாங்கத்தின் ஊழல் ஒழிப்பு நடவடிக்கைக்கான கண்காணிப்பின்போதே இவர் மாட்டிக்கொண்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-25)

# அமைச்சுப் பொறுப்புகள்: வர்த்தமானி வெளியீடு

கொழும்பு, செப்.30

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவால் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

அதில் அமைச்சர்களின் பொறுப்பில் உள்ள விடயதானங்கள், செயற்பாடுகள், திணைக்களங்கள், சட்டபூர்வ அமைப்புகள் மற்றும் அரசு நிறுவனங்களின் செயற்பாடுகள் குறித்து விவரிக்கப்பட்டுள்ளன. (ச-25-சி)

# பங்களாதேஷில் பௌத்தர்கள் மீது கட்டவிழ்க்கப்படும் வன்முறை!

## கொழும்பில் பிக்குகள் ஆர்ப்பாட்டம்

கொழும்பு, செப்.30

பங்களாதேஷில் இடம்பெற்றுவரும் சிறுபான்மையினர் மீதான அரச வன்முறைகளைத் தடுத்து நிறுத்துமாறு கடந்த வெள்ளிக்கிழமை கொழும்பிலுள்ள ஐ.நா. தூதரகத்தின் முன்பாக பௌத்த பிக்குகள் ஆர்ப்பாட்டமொன்றை நடத்தினர். 'சர்வதேச சமூகமே எங்களுக்கு உதவி செய்', 'பௌத்தர்களை கொல்வதை நிறுத்து', 'பங்களாதேஷ் இராணுவம் எம்மை மிருகங்களைப்போல் நடத்துகிறது', 'எமக்கு நீதி வேண்டும்', 'வந்தேறு குடிகளான பங்களாதேஷிகள் பூர்வீக மக்களை இலகுவாகக் கொலை செய்கின்றனர்','வந்தேறு குடிகளான பங்களாதேஷிகளிடம் மனிதாபிமானம் இல்லை', 'பங்களாதேஷின் பூர்வீகக் குடிகளின் இருப்பை அழிப்பதை நிறுத்து', 'வந்தேறு குடிகள் எம்மை முஸ்லிமாக மாறும்படி பலவந்தப்படுத்துகின்றனர்','பூர்வீகக் குடிகளின் சொத்துகளை கொள்ளையடிப்பதை நிறுத்துங்கள்' போன்ற சுலோகங்கள் அடங்கிய பதாகைகளைத் தாங்கியவாறு பிக்குகள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இந்த ஆர்ப்பாட்டத்தில் பங்களாதேஷ் பிக்குகளும் கலந்து கொண்டனர். பங்களாதேஷில் முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனாவின் ஆட்சி கவிழ்க்கப்பட்ட பின்னர் நோபல் பரிசு பெற்ற யூனுஸின் ஆட்சியில் சிறுபான்மை இந்துக்களுக்கும், பௌத்தர்களுக்கும் எதிராக வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளன. (ச-6)

# தினம் தெரியுமோ?

**வாயால என்ன வடையெண்டாலும், எத்தினை வேணுமெண்டாலும் சுடலாம். ஆனால் அதை நடைமுறைப்படுத்துறது அவ்வளவு ஈஸி இல்லை. அதுக்கு எங்கட திசைகாட்டிக்காரரும் விதிவிலக்கில்லை எண்டமாதிரித்தான் சம்பவங்கள் நடக்குது. அநுரகுமார ஜனாதிபதியா வந்தவுடனேயே நாளுக்கு ஒரு அறிவிப்பும், பொழுதுக்கொரு மாற்றமுமா பேஸ்புக் களை கட்டுது. திசைகாட்டிக்காரர் சொல்லாததைக்கூட சொன்னதா பேஸ்புக்கில போட்டு கொண்டாடுகினம். ஆனால் 'இனி அரச நிர்வாகத்தில அரசியல் தலையீடு இருக்கக்கூடாது' எண்டு அநுரவின்ர அரசாங்கம் உண்மையாவே அறிவிச்சது. வடக்குமாகாணத்துக்கு அரசியல் சார்பில்லாத, ஆளுமையுள்ள நல்லதொரு நிர்வாக அதிகாரியையையும் ஆளுநராப் போட்டு, தாங்கள் சொன்னதைச் செய்யிற ஆக்கள் எண்டு அநுர காட்டியிருக்கிறார். அது கனபேருக்கு திசைகாட்டிக்காரர் மேல ஒரு நம்பிக்கையை வரப் பண்ணி இருக்குது. எண்டாலும் இந்த நல்லதுக்கும் கண்ணூறு கழிக்கிறமாதிரி ஒரு சம்பவம் நடந்திருக்குது.**

**வடக்குமாகாண ஆளுநரா அநுரவுக்கு முன்னால தமிழில பதவிப்பிரமாணம் செய்திட்டு, யாழ்ப்பாணத்தில இருக்கிற ஒப்பீஸில கடமையேற்க ஆளுநர் வந்தவர். அநுர சொன்ன மாதிரி அரச நிர்வாகத்தில அரசியல்தலையீடு இருக்காது எண்டால், ஆளுநரை வரவேற்கிறதுக்கு அதிகாரிமார் மட்டும்தான் நிண்டிருக்கோணும். ஆனால் சிவப்புச்சட்டைத் தோழர் மார்தான் முன்னுக்கு நிண்டவையாம். முதல் ஆக்களா போய் மாலை போட்டு, பொன்னாடை போர்த்தினதில இருந்து, அங்க வந்து நிண்டவை எந்த ஓர்டரில ஆளுநரைச் சந்திக்கிறது எண்டது வரைக்கும் இந்தச் சிவப்புச் சட்டைத் தோழர்மார்தான் தலையிட்டிருக்கினம். சரி, அவையின்ர ஆட்சி எண்டதால, அதுவும் ஆளுநர் ஜனாதிபதியின்ர பிரதிநிதி எண்ட அடிப்படையில அந்தக் கட்சியைச் சேர்ந்த ஓராள் ஆளுநருக்கு போய் வாழ்த்துச் சொன்னால் ஆரும் அதைப் பெரிசா எடுத்திருக்க மாட்டினம். ஆனால் பெரும் படை பட்டாளமாப் போய், 'நாங்கள் தான் ஆளுநரை ஆட்டுவிக்கப் போறம்' எண்டகணக்கில நடந்துகொண்டதால கனபேருக்கு முகச்சுழிப்பு வந்ததில பிழையில்லைத்தானே.**

**சிலவேளை இதுகள் மேல்மட்டத்துக்கு தெரியாமல் இஞ்ச இருக்கிறவை காட்டின விளையாட்டா இருக்கலாம். ஆனால் இப்பிடி விடுகிற சின்னச் சின்னப் பிழையள் நாளைக்கு பெரிய பிழையளுக்கும் பிள்ளையார் சுழி போடவும் வாய்ப்பு இருக்கு. அதால மேலிடம் தங்கட கட்சிக்காரர் எல்லாருக்கும் எப்பிடி நடந்து கொள்ளோணும் எண்டு ஒருக்கா வகுப்பெடுக்கிறது நல்லது. இல்லாட்டி இவையும் முதல் இருந்தவை மாதிரி எல்லாத்துக்கையும் தங்கட கட்சிக்காரரை தலையோட்ட விட்டால், பிறகு நிலைமை தலைகீழாகிடும் கண்டியளோ.**

- பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மாற்றத்துக்கான மாற்றுவழி அரசியல் கலந்துரையாடல்

வவுனியா, செப்.30
தமிழ்த்தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் ஏற்பாட்டில் மாற்றத்துக்கான மாற்றுவழி எனும் கருப்பொருளில் அரசியல் கலந்துரையாடல் வவுனியாவில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்றது. கலந்துரையாடலில் வாழ்வுரிமை இயக்கத்தின் தலைவர் வி.எஸ். சிவகரன், சமூகச்செயற்பாட்டாளர் க.அருந்தவபாலன், மாகாண முன்னாள் அமைச்சர் ப.டெனிஸ்வரன், பொதுஅமைப்புகளின் பிரதிநிதிகள், அரசியல்ஆர்வலர்கள் கலந்து கொண்டனர். (ச-110)




## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** காரியங்கள் அனுகூலமாக முடியும். மனதில் தன்னம்பிக்கை அதிகரிப்பதுடன் உற்சாகமும் பெருக்கெடுக்கும். துணிச்சலு டன் செயற்படுவீர்கள் சிந்தனை மேலோங்கும். ஏற்பட்டிருந்த பிணக்குகள் நீங்கும். எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும்.

**இடபம்:** தாயின் அன்பும் ஆதரவும் கிடைக்கும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் திடீர் செலவுகளுக்கும் வாய்ப்பு உண்டு. பெரியவர் களின் ஆலோசனை அவசியம். மனவருத்தம் ஏற்படக் கூடும். அனுசரித்துச் செல்வது நல்லது.

**மிதுனம்:** புதிய முயற்சிகளை தொடங்குவது சாதகமாக முடியும். சுபநிகழ்ச்சி ஒன்று ஏற்பாடாகும். வீண் அலைச்சல் ஏற்படவும் உடல் அசதி உண்டாகவும் கூடும். சோர்வு நீங்கி உற்சாகம் பெறுவீர்கள். முன்னெச்சரிக்கை அவசியம்.

**கடகம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். எதிர்பார்த்த காரியங்கள் அனுகூல மாக முடியும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். வீட்டுப் பராமரிப்புப் பணிகளில் சுறுசுறுப்பாக ஈடுபடுவீர்கள். ஏற்பட்டிருந்த மனஸ்தாபம் நீங்கும்.

**சிம்மம்:** எதிர்பார்த்த உதவி கிடைக்கும். உங்கள் முயற்சிகளுக்கு ஒத்துழைப்பு கிடைக்கும். அவர் மூலம் உங்களுக்குத் தேவையான உதவிகளும் கிடைக்கும். தேவையற்ற விவாதங்களைத் தவிர்க்கவும். பேசும்போது பதற்றம் தவிர்க்கவும்.

**கன்னி:** நல்ல செய்தி கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு. மற்றவர்களுடன் பேசும்போது பொறுமை அவசியம். தொடங்கும் காரியம் சாதகமாக முடியும். வியாபாரத்தில் விற்பனையும் இலாபமும் அதிகரிக்கும்.

**துலாம்:** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உள்ளது. செலவுகளால் கடன் வாங்க நேரிடும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். கடன்கள் விடயத்தில் கவனம் தேவை. சில சங்கடங்கள் ஏற்படக்கூடும்.

**விருச்சிகம் :** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். ஆதாயம் கிடைக்கும். செலவுகளும் ஏற்படும். மறைமுக எதிர்ப்புகள் விலகும். மகிழ்ச்சி உண்டாகும். முயற்சி சாதகமாகும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும்.

**தனுசு:** மனதில் இனம் தெரியாத சோர்வு ஏற்படக்கூடும். செலவுகள் ஏற்படும். பணம் கிடைப்பது தாமதமாகும். குடும்பத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதில் சில சிரமங்கள் ஏற்படும். சஞ்சலம் ஏற்பட்டு நீங்கும். வியாபாரத்தில்

**மகரம்:** ஆதாயம் உண்டாகும். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். சிலருக்கு திடீர் பணவரவுக்கு வாய்ப்பு ஏற்படும். புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். வெளியில் செல்லும்போது கவனமாக இருக்கவும்.

**கும்பம்:** புதிய முயற்சிகள் எதிலும் ஈடுபட வேண்டாம். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. சற்று அலைச்சல் ஏற்படும். எதிர்பார்த்த உதவி கிடைக்கும். குடும்பத்தில் சில பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது. திடீர் செலவுகள் ஏற்படலாம்.

**மீனம்:** மன உறுதியுடன் செயற்படுவீர்கள். எதிர்பாராத பணலாபம் உண்டாகும். ஆனால், உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. மகிழ்ச்சி உண்டாகும். நுசிறு குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். செலவுகள் அதிகரிக்கும்.

# நவராத்திரி விழா

யாழ்ப்பாணம், செப்.30
தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான நவராத்திரி விழா எதிர்வரும் 3ஆம் திகதி வியாழக்கிழமை தொடக்கம் 12 ஆம் திகதி சனிக்கிழமை வரை நடைபெறவுள்ளது என ஆலய நிர்வாகசபையினர் தெரிவித்துள்ளனர். (ஒ-45)

# முதியோர் தின நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், செப்.30
சர்வதேச முதியோர் தினத்தை முன்னிட்டு எழுதுமட்டுவாழ் தெற்கு கிராமிய முதியோர் சங்கத்தின் ஏற்பாட்டில் முதியோர்தின நிகழ்வு நாளைமறுதினம் புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு எழுதுமட்டுவாழ் ஸ்ரீகணேசா வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.
சங்கத் தலைவர் இ. தெய்வேந்திரம்பிள்ளை தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சி பிரதேச செயலர் திருமதி உஷா சுபலிங்கம் கலந்துகொள்வார். (ச-9)





# பரிசளிப்பு விழா!

யாழ்ப்பாணம், செப்.30
தேவரையாளி இந்துக் கல்லூரியின் பரிசளிப்பு விழா பாடசாலை அதிபர் சதானந்தன் செல்வானந்தன் தலைமையில் பாடசாலையின் க.மு.சின்னத்தம்பி திறந்த வெளி அரங்கில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது.
இந்த நிகழ்வில் சாதனையாளர்களுக்கான பரிசில்கள் மற்றும் சான்றிதழ்களை நிகழ்வின் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட பாடசாலையின் பழைய மாணவரான திருகோணமலை மாவட்டப் பொது மருத்துவமனையின் மருத்துவ அதிகாரி சௌமியா செந்தூரன், அவரது துணைவரும், திருகோணமலை மாவட்டப் பொது மருத்துவமனையின் மருத்துவர் இளங்கோவன் செந்தூரன் உட்படப் பலரும் வழங்கி வைத்தனர். (ஒ-45-27)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org


உண்மை - நேர்மை - அஞ்சாமை
உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# ஒற்றுமை என்னும் முகமூடி

அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்குத்தான். ஆனால் அந்தத் திரள்தலும், மிடுக்குக் காட்டுதலும் சுயநலத்துக்காக நிகழ்வதைப் போல அபத்தம் வேறொன்றுமில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்து பிரிந்து சென்ற கட்சிகளை, மீண்டும் அதே கட்டமைப்பில் இணையுமாறு அழைப்பு விடுத்திருக்கிறது தமிழரசுக் கட்சி. இந்தத் திடீர் ஞானதோயம் தமிழரசுக்கட்சிக்கு இயல்பாக வரவில்லை. அதன் பின்னணியில் சிலகாரணிகள் இருக்கவே செய்கின்றன. பிரதான காரணம், நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தல் முடிவு தான்.

இந்தத் தேர்தலில் தமிழரசுக் கட்சி சஜித் பிரேமதாஸவை ஆதரித்திருந்த அதேசமயத்தில் பொது வேட்பாளருக்கு எதிரான பரப்புரைகளையும் முன்னெடுத்தது. எதற்காக அந்தக் கட்சி சஜித்தை ஆதரித்தது என்பதற்கோ அல்லது எதற்காக பொது வேட்பாளரை எதிர்த்தது என்பதற்கோ இன்னமும் எல்லோரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய தர்க்கரீதியான காரணத்தை தமிழரசுக் கட்சியால் முன்வைக்க முடியவில்லை. இவ்வாறு தமிழரசுக் கட்சியின் எதிர்ப்பையும் மீறி, தமிழ்ப்பொதுவேட்பாளர் பெற்றுக் கொண்ட 226,343 வாக்குகளும் தமிழரசுக் கட்சிக்கு ஒரு உண்மையை உணர்த்தின. இம்முறை தேர்தலில் அந்த 226,343 வாக்குகளும் தமிழரசுக் கட்சிக்கு எதிராகத் திரும்பினால் , மிகப்பெரிய மீளமுடியாத சரிவை அந்தக் கட்சி சந்திக்கும் என்பதே அந்தக் கசப்பான உண்மை. இந்தநிலையில் இலங்கை விவகாரத்தில் அக்கறை கொண்ட அயல் நாடொன்று தமிழரசுக்கட்சிக்குள் எதிரும் புதிருமாக நிற்கும் இருவருக்கும், 'ஒற்றுமையாக நில்லுங்கள்' என்று கொஞ்சம் இறுக்கமாகவே கட்டளையிட்டிருப் பதாகவும் தகவலொன்று உலாவுகின்றது. தேர்தலில் பொதுவேட்பாளருக்கு விழுந்த வாக்குகளும், வெளியக அழுத்தங்களுமே தமிழரசுக் கட்சியை மீண்டும் ஒற்றுமைக் கோத்தை எழுப்ப வைத்திருக்கின்றன.

தமிழ்த்தேசியக் கட்சிகள் அனைத்துமே ஓரணியில் நின்றால் மட்டுமே எமக்கான அரசியல் உரிமைகளுக்காக போராடமுடியும் என்ற தொலை நோக்கோடு தான் விடுதலைப்புலிகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைத் தோற்றுவித்தார்கள். தமது கொள்கைகளோடு முரண்பட்ட கட்சிகளைக் கூட இனத்தின் நன்மைகருதி இந்தக் கூட்டமைப்புக்குள் புலிகள் இணைத்திருந்தார்கள். ஆனால் அந்த விட்டுக் கொடுப்பும், தொலைநோக்கும் 2009 க்குப் பின்னர் செயலிழந்து, சுயநல அரசியல் குடிகொண்டதன் விளைவாக கூட்டமைப்பு சிதறுண்டு, அதிலிருந்து பிரிந்த தமிழரசு உள்ளிட்ட கட்சிகளும் தமக்குள் பிளவுண்டு, இப்போது சிறுகுறு அணிகளாக ஒன்றையொன்று எதிர்ப்பதிலும், காலைவாருவதிலுமே குறியாக உள்ளன. 'சுயநல அரசியலை விடுத்து இனத்தின் நன்மைக்காக ஒன்றிணையுங்கள்' என்ற கோரிக்கை மக்கள் தரப்பில் இருந்து விடுக்கப்பட்டபோதும், அதனைத் தமிழரசுக் கட்சி காதில் வாங்கிக்கொள்ளவே இல்லை. மாறாக பிரிந்து சென்ற பங்காளிக்கட்சிகளை 'ஒட்டுக்குழுக்கள், முன்னாள் ஆயுததாரிகள்' என்ற அடைமொழிகளோடு அவர்களுக்கு எதிரான கருத்துகளையே வெளியிட்டு குரோதத்தை இன்னும் வளர்த்தது தமிழரசுக் கட்சி. இப்படி தமக்கிடையே பகைமைத் தீயை எரியவைத்துவிட்டு, தேர்தலில் வாக்குகளைக் குறிவைத்து 'பிரிந்தோரே வாருங்கள்' என்று கூவுவதால் மட்டும் ஒற்றுமை வந்துவிடுமா? ஒருவேளை அப்படி நடந்தாலும் கூட அது தேர்தலுக்கான தற்காலிக கூட்டாகத்தான் இருக்குமே தவிர, தமிழின உரிமைக்கான உண்மையான கூட்டாக அமையப் போவதில்லை என்பது மட்டும் நிதர்சனம், இந்த உண்மை மக்களுக்கும் நன்கு தெரியும். எனவே ஒற்றுமைக் கோம் போட்டு, தம்மை நல்லவர்களாகக் காட்டும் நாடகம் எடுபடாது என்பதை தமிழ்த் தேசியக் கட்சிகள் இனியாவது புரிந்துகொள்ள வேண்டும்.




# உயரடுக்குப் பாதுகாப்பு; மட்டுப்படுத்துகிறது அரசு

கொழும்பு, செப்.30

**உயரடுக்குப் பாதுகாப்பு அளிக்கும் மதத் தலைவர்கள், பிரதம நீதியரசர் தலைமையிலான மற்ற நீதிபதிகள் மற்றும் சட்டத்துறை தலைவர்கள், தூதுவர்கள், வெளிநாட்டு பிரதிநிதிகள் ஆகியோரின் பாதுகாப்பை பழைய முறையிலேயே முன்னெடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.**

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் பணிப்பின் கீழ் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது.

அத்துடன் எதிர்காலத்தில் அமைச்சர்களுக்கான உயரடுக்குப் பாதுகாப்பை வரம்பற்ற முறையில் பயன்படுத்துவதை நிறுத்த புதிய அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

மேலும் தற்போது உயரடுக்குப் பாதுகாப்புப் பிரிவில் பணியாற்றும் 2 ஆயிரம் அதிகாரிகளை சாதாரண பொலிஸ் சேவையில் இணைக்கவும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க அரசாங்கம் தீர்மானம் எடுத்துள்ளது.

அதேவேளை அச்சுறுத்தலுக்கு உள்ளாகியிருக்கும் முக்கியஸ்தர்களுக்கு உயரடுக்குப் பாதுகாப்பு வழங்கப்படும் என்றும் அரசாங்கம் அறிவித்துள்ளது. (ச)

# வருமான வரி செலுத்தல்; காலக்கெடு இன்று நிறைவு

கொழும்பு, செப்.30

நாட்டு மக்கள் 2023/2024 மதிப்பீட்டு ஆண்டுக்கான வருமான வரிக் கொடுப்பனவுகளை செலுத்துவதற்கான காலக்கெடு இன்றுடன் நிறைவுபெறுகிறது. காலக்கெடுவுக்கு வரி செலுத்தத் தவறினால் அபராதம் விதிக்கப்படும் மற்றும் வட்டி வசூலிக்கப்படும் என்று உள்நாட்டு வருவாய்த்துறை எச்சரித்துள்ளது.

வருமான வரி செலுத்தாததற்கு அல்லது தாமதமாக செலுத்துவதற்கு விதிக்கப்படும் அபராதம் மற்றும் வட்டி தள்ளுபடி செய்யப்படாது அல்லது குறைக்கப்படாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)



# ரைஸ், கொத்து விலை குறைப்பு

கொழும்பு, செப்.30

நாடளாவிய ரீதியில் ரைஸ், கொத்து ரொட்டியின் விலை நேற்று நள்ளிரவு முதல் 40 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளதாக சிற்றுண்டிச்சாலை மற்றும் உணவக உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. (ச)

எட்டு ஆண்டுகளுள்

# 43, 68,340 பேருக்கு கடவுச்சீட்டுகள்!

கொழும்பு, செப்.30

இலங்கையில் கடந்த எட்டு ஆண்டுகளுள் 43 இலட்சத்து 68 ஆயிரத்து 340 பேர் வெளிநாட்டுக் கடவுச்சீட்டுகளை பெற்றுக்கொண்டுள்ளதாக மத்தியவங்கி அறிக்கை தெரிவித்துள்ளது. கடந்த 27 மாதங்களில் மாத்திரம் 26 இலட்சத்து 40 ஆயிரத்து 640 பேர் கடவுச்சீட்டுகளைப் பெற்றுக்கொண்டுள்ளனர். வெளிநாடுகளுக்குச் செல்வதற்காக அதிகளவானோர் கடந்த 2023ஆம் ஆண்டில் பதிவு செய்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# ஜெய்சங்கர் இலங்கைக்கு ஒருநாள் பயணம்

கொழும்பு, செப்.30

இலங்கை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுடன் பேச்சுகளை மேற்கொள்வதற்காக இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் எதிர்வரும் நான்காம் திகதி இலங்கைக்கு ஒரு நாள் விஜயத்தை மேற்கொள்ளவுள்ளார். முன்னதாக அநுரகுமார திஸாநாயக்க புதுடில்லிக்கு விஜயம் மேற்கொண்டிருந்தவேளை ஜெய்சங்கர் அவரை சந்தித்திருந்தார்.

இந்திய வெளிவிவகார அமைச்சரின் பயணத்தின்போது இந்தியாவின் உதவியுடன் முன்னெடுக்கப்படும் பல திட்டங்கள்குறித்து ஆராயப்படலாம் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன. (ச)

## நாளை

01.10.2024

செவ்வாய்க்கிழமை - புரட்டாதி - 15

சுபநேரம் : 10.32- 12.02

ராகுகாலம் : 03.02 - 04.32

## நாளொரு நல்வார்த்தை

நீ பிறரின் குணாதிசயங்களைக் கணிக்கத்துவங்கினால் அவர்பால் அன்பு செலுத்த நேரம் இருக்காது.

- அன்னை தெரேசா-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருநெல்வேலியில்

## முதியோர்களுக்கான விளையாட்டுப் போட்டி

யாழ்ப்பாணம், செப்.30

முதியோர் சங்கத்தினரின் ஒழுங்கமைப்பில் முதியோர்களுக்கான விளையாட்டுப் போட்டி திருநெல்வேலி சிவன் அம்மன் கோவிலுக்கு அருகில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

போட்டியின் நிறைவில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில்கள் வழங்கிவைக்கப்பட்டன. (ச-45-66)

# நிஜமான நல்லிணக்கமே நிலையான மாற்றம்

குரலற்றவர்களின் குரல் அமைப்பு தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், செப். 30**

**நாட்டை முன்னேற்றும் ஒரு கதாநாயகனாக ஆட்சிப் பொறுப்பேற்றிருக்கும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தமிழ் மக்களது பிரச்சினைகளை ஆராய்ந்து நிரந்தரமானதொரு அரசியல் தீர்வுக்கு வழி வகுக்கவேண்டும். நிஜ மாற்றங்களால் மாத்திரமே இலங்கையில் இன ஒற்றுமையை ஏற்படுத்த முடியும். அதுவே இந்த நாட்டை மதிக்கத்தக்க முன்னேற்றத்துக்கு இட்டுச்செல்லும் என்று குரலற்றவர்களின் குரல் அமைப்பு தெரிவித்துள்ளது.**

இதுதொடர்பில் அந்த அமைப்பு வெளியிட்ட ஊடக அறிக்கையில் உள்ளதாவது:-

மக்களதிகாரத்தின் ஊடாக ஆணைபெற்று அரச தலைவராக பதவியேற்றிருக்கின்ற தங்களுக்கு, சமூக பொருளாதார ரீதியில் சிதைவடைந்துள்ள இந்நாட்டை துரிதமாக சீரமைக்கும் தலையாய கடமைப் பொறுப்பு இருப்பதை தாங்கள் நன்கறிவீர்கள்.

இந்த நாடு சமூக பொருளாதார ரீதியில் சிதைவடைந்துள்ளமைக்கு அடிப்படைக் காரணமாக அமைவது, நாட்டில் புரையோடிப் போயிருக்கின்ற இனப்பிரச்சினையும் அதனுடான யுத்தமும்தான்.

இவற்றுக்கான, காரணகாரியங்களைக் கண்டறிந்து நாட்டில் இன நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் பட்சத்தில், இந்நாட்டின் மீதான இதர தலையீடுகளை இல்லாது செய்து தேசத்தை அபிவிருத்தி நோக்கி கட்டியெழுப்ப முடியும். அதுவே காலத்தின் தேவையும் கூட.

பூர்வீக இனமான தமிழ் மக்கள் தமது தாய் நிலத்தில் சம உரிமையுடனும் சமூக அந்தஸ்துடனும் வாழ்வதற்காக தசாப்தங்கள் பல கடந்தும் இன்றுவரை போராடிக் கொண்டிருக்கின்றார்கள்

ஆண்டாண்டு காலங்களாக அதிகாரக் கதிரையேறும் எந்த ஒரு அரச தலைவரும், தமிழ் மக்கள் தமது நியாயமான வாழ்வுரிமைகளை முழுமையாக அனுபவிப்பதற்கு வழிவகுத்ததில்லை.

எனவே, மாற்றத்தின் ஊடாக நாட்டை முன்னேற்றும் ஒரு கதாநாயகனாக ஆட்சிப் பொறுப்பேற்றிருக்கும் ஜனாதிபதி தமிழ் மக்களது பிரச்சினைகளை ஆராய்ந்து நிரந்தரமானதொரு அரசியல் தீர்வுக்கு வழி வகுக்க வேண்டும்.

தனிமனித உரிமைகளை தடுத்தாழ்கின்ற வகையில் செரிவூட்டப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்ற கொடூரமான பயங்கரவாதத் தடைச் சட்டம் முழுமையாக அகற்றப்படவேண்டும். போரின் பெயரில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளின் கதி அறியாது பல வருடங்களாக போராட்டம் நடத்திக் கொண்டிருக்கின்ற தாய்மார்களின் கண்ணீருக்கு காலம் தாழ்த்தாது நியாயமான நிரந்தரத் தீர்வை தரவேண்டும்.

இதுபோன்ற நிஜ மாற்றங்களால் மாத்திரமே இலங்கையில் இன ஒற்றுமையை ஏற்படுத்த முடியும் என்றுள்ளது. (ச-20-27)



## கௌரவிப்பு

யாழ்ப்பாணம், செப்.30

நீர்வேலி கந்தசுவாமி கோயிலின் பிரதம குருக்கள் இராஜேந்திரசுவாமிநாதக் குருக்களின் சமய சமூக சேவையைப் பாராட்டி நேற்றுமுன்தினம் சனிக்கிழமை ஆலய மண்டபத்தில் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

பரிபாலனசபையின் தலைவர் சி.தயானந்தன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதம குருக்களுக்கு 'ஸ்கந்தகுரு ஞானபானு' என்ற பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. நிகழ்வில் சமய பெரியார்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ச-17)

## சிறுவர், முதியோர் தின நிகழ்வுகள் யாழில்

யாழ்ப்பாணம், செப்.30

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு 'உலகை வென்றவர்கள் வாசித்த மக்களே' எனும் தலைப்பிலான சிறுவர் மற்றும் முதியோர் தின நிகழ்வு மாநகர ஆணையாளர் ச.கிருஸ்னேந்திரன் தலைமையில் யாழ்ப்பாணம் பொது நூலகக் கேட்போர் கூடத்தில் நாளை செவ்வாய்க்கிழமை மு.ப.9.30 மணிக்கு நடைபெறவுள்ளது. (25)



அஞ்சல் தினத்தையொட்டி கொக்குவிலில் சிரமதானம்

யாழ்ப்பாணம், செப். 30

எதிர்வரும் 9 ஆம் திகதி இடம்பெறவுள்ள 150 ஆவது உலக அஞ்சல் தினத்தை முன்னிட்டுக் காங்கேசன்துறை வீதி, கொக்குவில் பொதுச் சந்தைக்கு அருகில் அமைந்துள்ள வெள்ளவாய்க்கால் கடந்த வியாழக்கிழமை கொக்குவில் அஞ்சலகத்தினரால் நல்லூர்ப் பிரதேசசபையினரின் ஒத்துழைப்புடன் சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்பட்டுள்ளது.

கொக்குவில் அஞ்சலகத்தின் பொறுப்புத் தபாலதிபர் இ.லம்போ்ட் தலைமையில் இடம்பெற்ற சிரமதான நடவடிக்கையில் கொக்குவில் அஞ்சலகத்தின் உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் பங்குபற்றினர். (ச-66)





## விருது வழங்கல்

யாழ்ப்பாணம், செப்.30

இணுவில் மக்லியோட் மருத்துவமனையின் ஏற்பாட்டில் சித்த ஆயுள்வேத மற்றும் சுதேச மருத்துவர்களை கௌரவித்து விருது வழங்கும் நிகழ்வு இணுவில் மக்லியோட் மருத்துவமனையின் பணிப்பாளரும், யாழ் போதனா மருத்துவமனையின் குழந்தைகள் மற்றும் சிறுவர் சத்திர சிகிச்சை மருத்துவ நிபுணர் பா.சயந்தனின் தலைமையில் நேற்று முன்தினம் சனிக்கிழமை சுன்னாகத்தில் தனியார் விடுதியில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் ஆயுர்வேத மற்றும் சுதேச மருத்துவர்களுக்கு அவர்கள் ஆற்றிவரும் சேவையினை கௌரவித்து விருதுகள் வழங்கி வைக்கப்பட்டதுடன், ஊடகத்துறையில் சேவைகளை ஆற்றிவரும் சிரேஷ்ட ஊடகவியலாளர் விக்னேஸ்வரன் கஜீபனுக்கு ஊடக மணி மகுடம் விருதும் வழங்கி வைக்கப்பட்டன.

நிகழ்வில் விருந்தினர்களாக மயக்க மருந்து உணர்வழியியல் மருத்துவ நிபுணர் நா.தரணிதரன், உடுவில் பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர் செ.சுகுணன் ஆகியோர் கலந்து கொண்டனர். (ரி-125)



## முதியோர்களுக்கான விளையாட்டுப்போட்டி!

யாழ்ப்பாணம், செப்.30

சர்வதேச முதியோர் தினத்தை முன்னிட்டு சண்டிலிப்பாய் பிரதேச செயலகம் நடத்திய முதியோர்களுக்கான விளையாட்டுப் போட்டி பிரதேச செயலாளர் திருமதி சுபாஜினி மதியழகன் தலைமையில் சண்டிலிப்பாய் சீரணி நாக பூசணி அம்மன் கோவில் முன்பாக கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது.

நிகழ்வில் கிடுகு பின்னுதல், பந்து போடுதல், சங்கீதக் கதிரை, பலூன் உடைத்தல், ஊசி நூல் கோர்த்தல், ஓட்டம் உள்ளிட்ட பல்வேறு விளையாட்டுகள் நடைபெற்றன. (ச-45-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விதை நெல் விற்பனைக்கு

இயந்திரத்தினால் சுத்திகரிக்கப்பட்ட அதி கூடிய விளைச்சலைத் தரக்கூடிய மூன்றுமாத B.W.312, மூன்றரை மாத B.G. 34.6 இன விதை நெல் விற்பனைக்கு உண்டு.

(CR/43311) J-1

077 659 2044

# மனைவியின் உடலை மீட்டுத் தாருங்கள்

## கணவன் கோரிக்கை

வவுனியா, செப். 30

வவுனியா - ஆண்டியாபுளியங்குளத்தைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தாய் ஒருவர் சவுதியில் உயிரிழந்துள்ள நிலையில் அவரது உடலை மீட்டுத்தருமாறு கணவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எனது மனைவி கடந்த இரு வருடங்களுக்கு முன்பாக வேலை விசாவில் சவுதி அரேபியாவுக்குச் சென்றார். பயணம்செய்த நாளிலிருந்து இது வரை காலமும் சாதாரண தொலைபேசியில் தான் எம்மோடு கதைத்து வந்தார். அவரது முகத்தைக்கூட நாம் பார்க்கவில்லை. கடந்த சில நாட்களாக தனக்கு அங்கு சித்திரவதை இடம்பெறுவதாகவும் தன்னை உடனடியாக நாட்டுக்கு திருப்பி எடுக்குமாறும் கூறினார். இது தொடர்பாகப் பல தடவை அவரை அனுப்பிய முகவரிடம் கூறியும் உரிய பதிலை அவர் தரவில்லை. இந்நிலையில் எனது மனைவி சில நாட்களாக என்னுடன் தொடர்பை ஏற்படுத்தவில்லை. நாம் முகவரை அணுகியபோது அவர் சுகவீனமடைந்து இருப்பதாக எமக்கு தெரிவிக்கப்பட்டது. பின்னர் அவர் இறந்துவிட்டதாக தெரிவித்தார்கள். அவர் இறந்து 15 நாட்களின் பின்னரே எமக்குத் தகவல் வழங்கப்பட்டது. தற்போது உயிரிழந்து 40 நாட்கள் கடக்கின்ற நிலையில் எனது மனைவியின் உடலைக் கொண்டுவருவதற்கான எந்த நடவடிக்கையும் முன்னெடுக்கப்படவில்லை. அவரது சடலத்தை யாவது விரைவாக பெற்றுத்தருவதற்கு உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன் - என்றார்.

நிலுபா (வயது -38) என்பவரே இவ்வாறு உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-110)

## நீங்கா நினைவலைகள்

12ஆம் ஆண்டு



அமரர்

சீனிவாசகம் தருமலிங்கம்

தோற்றம் 02.10.1927 மறைவு 11.11.2012

10ஆம் ஆண்டு



அமரர்

தருமலிங்கம் நாகலட்சுமி

தோற்றம் 13.02.1934 மறைவு 21.09.2014

எம்மை வளர்த்து ஆளாக்கிய
எமது அன்புத் தெய்வங்களை
வாழ்த்தி நினைவு கூறுகின்றோம்.

கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

(CS/56338) J-1

குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 03 . 11 . 1940

மறைவு 12 . 10 . 2023

திருமதி சிவசோதி சாம்பசிவம் (பெரியக்கா)

ஓராண்டு ஓடி மறைந்ததுவோ - அம்மா
அன்பு வதனமும் அரவணைக்கும் கைகளும்
பசி என்று வந்தோருக்கு அமுதளிக்கும்
கருணை குணம் கொண்ட தாயாரே
காலமெல்லாம் உமை நாம் மறவோம் அம்மா
என்றும் உங்கள் நினைவுகளுடன்

நல்லூர்.

குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவுநாள் அழைப்பு



கடந்த (11.10.2023) புதன்கிழமை அன்று சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவர்

### அமரர் திரு. தர்மலிங்கம் சிவசுப்பிரமணியம்
(சற்குணம்)

அவர்களின் முதலாம் ஆண்டு நினைவு நாள் இன்று (30.09.2024) திங்கட்கிழமை முற்பகல் 12.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளமையால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.


ஓராண்டு நீங்கள் எங்களை விட்டு சென்று ஐயா!
ஆனால் உங்கள் நினைவு மறையவில்லை
எப்போதும் எங்கள் அருகில் உங்கள் நினைவு
உங்கள் உயிர் பிரிந்தாலும் உங்கள் புன்சிரிப்பும் பகிடியும்
புத்தி சொல்வதும் எங்கள் வாழ்வில் மறக்க முடியாது.
உங்கள் ஆத்மா சாந்தி அடைந்து மகாமாரி அம்மன்
திருவடியில் அமர்ந்து எமை பார்த்துக் கொண்டிருப்பீர்கள்
என நினைத்து எங்கள் மனதை தேற்றிக் கொள்கின்றோம்.
ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!

பிரம்படி ஒழுங்கை,
கொக்குவில்.

(CS/29013) J-1

குடும்பத்தினர்.

## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 24.05.1949 மறைவு 30.09.2019

பொன்னுத்துரை இராஜலக்சுமி

தற்காத்து கொண்டான் பேணி
தகைசான்ற சொற்காத்து சோர்விலாள் பெண்
என்ற வள்ளுவர் வாக்கிற்கிணங்க
வாழ்ந்து மறைந்த அன்புத் துணைவியே
உன் பிரிவால் துயருறும் அன்புக் கணவன்.

(CS/51441) (N-1)

பாலலோடை
களபூமி, காரைநகர்.
இல. 10 குமார வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

தில்லையம்பலம்
பொன்னுத்துரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேள்வி அறிவித்தல்

## வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்
## சபை நிதி - 2024 (கட்டம் IX)

01. வலிகாமம் கிழக்கு பிரதேச சபையானது சபைநிதியினைக் கொண்டு கீழ்காட்டப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வேலைத்திட்டங்களுக்கு கொடுப்பனவிற்கு பயன்படுத்த உத்தேசித்துள்ளது.

02. தலைவர், உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு, வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர், வலிகாமம் கிழக்கு பிரதேச சபை சார்பாக தகுதி வாய்ந்த ஒப்பந்த காரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைகளுக்காக கோருகின்றார்.

03. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவும் நிதி அமைச்சினால் வெளியிடப்பட்ட 01.03.2024 ஆம் திகதிய 01/2024 ஆம் இலக்க பொது அரச நிதி சுற்றறிக்கைக்கு அமைவாகவும் கேள்வி கோரப்படுகின்றது கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், கீழுள்ள அட்டவணையில் காட்டியபடி பொருத்தமான தரத்தில் கட்டுமான துறையில் நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA) பதிவுகள் மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.

04. தேவையான தகைமைகள் கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) கேள்வி ஆவணம் பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.

05. பெறுமதிசேர்வரி (VAT) பதிவினைக் கொண்டவர்கள் கேள்விகள் சமர்ப்பிக்கப்படும்போது பெறுமதிசேர்வரி (VAT) சான்றிதழ் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். அவ்வாறான ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்ட கேள்விதாரர்களுக்கு மட்டுமே சபையினால் பெறுமதிசேர்வரி (VAT) கொடுப்பனவு மேற்கொள்ளப் படும்.

06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் **தலைவர், பெறுகைக்குழு வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர் (தொலைபேசி இல: -021-205 8867 )** அவர்களிடமிருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலை நாட்களில் காலை 09:00 மணிமுதல் மாலை 3:00 மணிவரை 2024.09.30 ஆம் திகதியில் இருந்து 2024.10.11 ஆம் திகதி வரை கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.

07. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் **தலைவர், பெறுகைக்குழு வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்.** அவர்களிடமிருந்து 2024.09.30 ஆம் திகதியிலிருந்து 2024.10.11 ஆம் திகதி வரையான வேலை நாட்களில் காலை 09:00 மணி தொடக்கம் மாலை 3:00 மணி வரையிலும், 2024.10.14 ம் திகதி காலை 9:00 மணி தொடக்கம் 10:00 மணி வரையிலும் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 3000/- செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.

08. கேள்வியினை இரு பிரதிகளில் தயாரித்து **தலைவர் பெறுகைக்குழு , வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, பருத்தித்துறை வீதி புத்தூர், யாழ்ப்பாணம்** எனும் முகவரிக்கு 2024.10.14 ஆம் திகதி பி.ப 1:30 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும் அல்லது அலுவலகத்தில் வைக்கப் பட்டிருக்கும் கேள்விப் பெட்டியில் இடப்பட வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகைதரும் கேள்விதாரா் அல்லது அவா்களது பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

09. கேள்வி, கேள்விப்பிணை செல்லுபடியாகும் காலம், கேள்வி பிணை வைப்புத் தொகை என்பன கீழே அட்டவணையிற் காட்டப்பட்டுள்ளது

10. கேள்வி கோரல் பற்றிய முன் கேள்வி கூட்டம் வலிகிழக்கு பிரதேச சபை மாநாட்டு மண்டபத்தில் 2024.10.07 ஆம் திகதி மு.ப.10:30 மணிக்கு நடைபெறும். இக்கூட்டத்தில் ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கலந்து கொள்ளலாம். இதற்கு எதுவித கொடுப்பனவுகளும் வழங்கப்படமாட்டாது.

| ஒப்பந்த இலக்கம் | வேலை விபரம் | மதிப்பீட்டுத் தொகை (மில்லியனில்) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | கேள்வி சமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியிலிருந்து கேள்வி செல்லுபடியாகும் காலம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | பிணை வைப்பு (ரூபா) | செல்லுபடியாகும் காலம் |
| **NP/14/41(13)/4/Council/PIX/2024/44** | அந்திரானை மயான வீதி புனரமைப்பு – வாதரவத்தை | 15.50 | 90 நாட்கள் | **C6& C5** ( வீதி நிர்மானம் ) | 77 நாட்கள் | 155,000.00 | **27.01.2025** |
| **NP/14/41(13)/4/Council/PIX /2024/45** | கல்வியல் கல்லூரி பின் பக்க வீதி புனரமைப்பு – கோப்பாய் மத்தி | 7.00 | 60 நாட்கள | **C7 & C6** (வீதி நிர்மானம் ) | 77 நாட்கள் | 70,000.00 | **27.01.2025** |
| **NP/14/41(13)/4/Council/DR/ PIX/2024/46** | பூலசிட்டி வீதி புனரமைப்பு , அச்செழு | 6.32 | 60 நாட்கள | **C7 & C6** (வீதி நிர்மானம் ) | 77 நாட்கள் | 64,000.00 | **27.01.2025** |
| **NP/14/41(13)/4/Council/PIX/2024/47** | குதியடி வீதி புனரமைப்பு – கோப்பாய் வடக்கு | 4.84 | 60 நாட்கள் | **C8& C 7** (வீதி நிர்மானம் ) | 63 நாட்கள் | 49,000.00 | **13.01.2025** |
| **NP/14/41(13)/4/Council/DR/ PIX/2024/48** | கல்வியல் கல்லூரி வடக்கு பக்க வீதி புனரமைப்பு – கோப்பாய் மத்தி | 4.11 | 60 நாட்கள் | **C8& C 7** (வீதி நிர்மானம் ) | 63 நாட்கள் | 42,000.00 | **13.01.2025** |
| **NP/14/41(13)/4/Council/PIX /2024/49** | உலக்கைப்புலம் வீதி (சலப்பாய் வீதி ) புனரமைப்பு ,ஆவரங்கால் | 2.65 | 60 நாட்கள் | **C8& C 7** (வீதி நிர்மானம் ) | 63நாட்கள் | 27,000.00 | **13.01.2025** |
| **NP/14/41(13)/4/Council/PIX /2024/50** | பிராயடி வீதி புனரமைப்பு , கல்வியங்காடு | 2.74 | 60 நாட்கள் | **C8 & C7** (வீதி நிர்மானம் ) | 63 நாட்கள் | 28,000.00 | **13.01.2025** |
| **NP/14/41(13)/4/Council/PIX /2024/51** | எல்லாளன் சரஸ்வதி இணைப்பு வீதி புனரமைப்பு , நவக்கிரி | 8.75 | 60 நாட்கள் | **C7 & C6** (வீதி நிர்மானம் ) | 77 நாட்கள் | 88,000.00 | **27.01.2025** |
| **NP/14/41(13)/4/Council/PIX/2024/52** | அஞ்சல் அலுவலக பக்க வீதி புனரமைப்பு ,அச்சுவேலி தெற்கு | 1.44 | 45 நாட்கள் | **C9& C8** ( வீதி நிர்மானம ) | 49 நாட்கள் | 15,000.00 | **30.12.2024** |
| **NP/14/41(13)/4/Council/PIX/2024/53** | நடமாடும் விற்பனைக் கூடம் அமைத்தல் | 0.93 | 45 நாட்கள் | **C9& C8** ( கட்டட நிர்மானம | 49 நாட்கள் | 10,000.00 | **30.12.2024** |

**தலைவர்,**
**உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு,**
**வலிகாமம் கிழக்கு பிரதேச சபை**
**புத்தூர்.**
**2024.09.30**

(CR/43309) J-1


# அநுர அரசாள்வான்!

## பிறந்து 6 மாதத்திலேயே சோதிடர் எதிர்வுகூறினாராம்

கொழும்பு, செப். 30

எனது மகன் அநுர பிறந்து ஆறாம் மாதம் நான் அவனது சாதகத்தை ஒரு சோதிடரிடம் கொண்டுபோய் கொடுத்தேன். அவர் அதிர்ச்சியடைந்து, எனது முகத்தைப் பார்த்துவிட்டு, உங்கள் மகன் ஒரு நாள் அரசாள்வான் எனச் சொன்னார் என ஜனாதிபதி அநுரகுமாரவின் தாயார் டி.எம்.சீலாவதி கொழும்பு ஆங்கில ஊடகத்துக்குத் தெரிவித்துள்ளார்.

'ஒரு முறை விகாரையொன்றின் மதகுரு அநுரகுமாரவை துறவறத்துக்கு அனுப்புமாறு கேட்டார். அப்போது அவருக்கு 12 வயது. நான் அதனை ஏற்கவில்லை' என்று தாயார் குறிப்பிட்டுள்ளார்.

'பல வருடங்களின் பின் பொலிஸார் அவரைத் தேடிக்கொண்டிருந்ததால் தந்தையின் இறுதி நிகழ்வில் அநுரகுமார கலந்து கொள்ள முடியாத நிலை ஏற்பட்டது' என்றும் அவர் தெரிவித்துள்ளார். (அ-ஒ-இ)

புலமைப்பரிசில் வினாத்தாள் கசிவு:

# புள்ளி வழங்குவதே சிறந்த தீர்வு

## கல்வி அமைச்சுக்குப் பரிந்துரை

கொழும்பு, செப். 30

இந்த ஆண்டு நடைபெற்ற ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சை தொடர்பாக எழுந்துள்ள பிரச்சினைக்கு, பரீட்சைக்கு முன்னர் கலந்துரையாடப்பட்டதாக இனங்காணப்பட்ட மூன்று வினாக்களுக்கும் தோற்றிய சகல மாணவர்களுக்கும் புள்ளிகளை வழங்குவதே சிறந்த மாற்றாக இருக்கும் என பிரதமரும் கல்வி அமைச்சருமான ஹரிணி அமரசூரியவால் நியமிக்கப்பட்ட நிபுணர் குழு பரிந்துரைத்துள்ளது.

சர்ச்சைக்குரிய தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சை இந்த வருடம் மீண்டும் நடத்தப்படுமா? இல்லையா? என்பது தொடர்பில் தீர்மானிப்பதற்காக பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரியவின் ஆலோசனையின் பேரில் 7 பேர் கொண்ட குழுவொன்றை நியமித்து கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்திருந்தது.

அந்த அறிக்கையை ஆய்வு செய்து எடுக்கப்பட வேண்டிய மிகவும் பொருத்தமான நடவடிக்கைகளைப் பரிந்துரைக்க கல்விக்குப் பொறுப்பான பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரியவால் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிபுணர் குழுவொன்று நியமிக்கப்பட்டது. கல்வியாளர்கள், கல்வி உளவியலாளர்கள், விசேட மருத்துவர்கள் மற்றும் புள்ளியியல் அறிஞர்கள் ஆகியோரைக் கொண்டு அந்தக் குழு நியமிக்கப்பட்டிருந்தது.

அதன்படி, மீண்டும் பரீட்சையை நடத்துவது, 10 வயதுக்குட்பட்ட மாணவர்களின் மன நிலையில் கடுமையான பாதிப்பையும், மன உளைச்சலையும் ஏற்படுத்தும் என்றும் அனைத்து மாணவர்களுக்கும் நீதி வழங்குவது இன்றியமையாதது எனவும் குழு பரிந்துரைத்துள்ளது.

எனவே பரீட்சைக்குத் தோற்றிய அனைத்து மாணவர்களுக்கும் பரீட்சைக்கு முன்னதாக விவாதிக்கப்பட்ட மூன்று கேள்விகளுக்கு மதிப்பெண்கள் வழங்கப்பட வேண்டும் என்றும் நிபுணர் குழு பரிந்துரைத்துள்ளது. (அ-ஒ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பொதுத்தேர்தலில் சுயேச்சையாக வடக்கு - கிழக்கில் களமிறக்கம்!

## புனர்வாழ்வளிக்கப்பட்ட போராளிகள் கட்சி அறிவிப்பு

**யாழ்ப்பாணம், செப். 30**

**எதிர்வரும் நாடாளுமன்ற பொதுத் தேர்தலில் வடக்கு - கிழக்கில் உள்ள முன்னாள் போராளிகள், சிவில் அமைப்புகள், ஆதரவாளர்கள் மற்றும் புலம்பெயர் மக்களின் ஆதரவுடன் சுயேச்சையாகப் போட்டியிட உள்ளதாக புனர்வாழ்வளிக்கப்பட்ட தமிழ் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவர் கே.இன்பராசா தெரிவித்துள்ளார்.**

மன்னாரில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை, இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு -கிழக்கு மக்களுக்காக நாங்கள் எங்கள் உயிரையே அர்ப்பணித்தோம். எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் வடக்கு - கிழக்கில் உள்ள 8 மாவட்டங்களிலும் சுயேச்சையாகப் போட்டியிடவுள்ளோம்.

தமிழ் மக்கள் தமது பூரண ஒத்துழைப்பை வழங்கவேண்டும்.

தற்போதைய ஜனாதிபதி ஊழலை ஒழிக்க நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகின்றமை பாராட்டத்தக்க விடயமாகும்.

அதேபோல் வடக்கு- கிழக்கிலும் ஊழல் நிறைந்த அரசியல்வாதிகளைப் புறம் தள்ளி ஒரு புதிய ஊழலற்ற அரசியலை முன்னெடுக்க நாங்கள் தயாராகவுள்ளோம் - என்றார். (ச-60, 56)

# ஆக்கங்கள் அனுப்பலாம்

சாவகச்சேரி, செப்.30

சாவகச்சேரி நகரசபை பொது நூலகங்களால் ஒக்ரோபர் மாதத்தில் நடத்தப்படவுள்ள தேசிய வாசிப்பு மாத நிகழ்வுகளின் இறுதிநாள் நிகழ்வில் வெளியிடப்படவுள்ள புதிய சஞ்சிகைக்கு எழுத்தாளர்களிடமிருந்து ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன.

அத்துடன் சாவகச்சேரியுடன் தொடர்புள்ள வகையில் சஞ்சிகைக்கு பெயரையும் வழங்குமாறும் பிரதேச மக்களைக் கேட்டுள்ளனர்.

ஆக்கங்கள் மற்றும் சஞ்சிகைக்குரிய பெயரை ஒக்ரோபர் 10 ஆம் திகதி வியாழக்கிழமைக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு நகரசபை நிர்வாகத்தினர் கேட்டுள்ளனர். (ரி-9)



# விதிகளை மீறிய 12 பேர் சிக்கினர்

கிளிநொச்சி, செப்.30

தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பல பகுதிகளில் வீதிப் போக்குவரத்துą: பொலிஸாரினால் கடந்த வெள்ளிக்கிழமை மேற்கொள்ளப்பட்ட சோதனைகளின் போது மதுபோதை மற்றும் சாரதி அனுமதிப்பத்திரம் இன்மை போன்ற போக்குவரத்து விதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் 12 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளதுடன் தடயப்பொருள்களை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தருமபுரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி டி.எம். சதுரங்க தெரிவித்துள்ளார். (ச-25,113)

# வாழ்வாதாரச் சுமையை குறைக்கவேண்டும்

*மாக்கிச லெனினிசக் கட்சி தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், செப். 30

புதிய ஜனாதிபதி வந்ததைத் தொடர்ந்து நாட்டிலும் சர்வதேச ரீதியிலும் அதிர்வுஏற்பட்டுள்ளது. அந்த வகையில் மக்களின் வாழ்க்கைச் செலவைக் குறைக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று மாக்கிச லெனினிசக் கட்சியின் பொதுச்செயலாளர் சி.க.செந்தில்வேல் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

எம்மைப் பொறுத்தவரை இலங்கையில் உழைக்கின்ற மக்கள் 90 வீதமானவர்கள் இருக்கின்றார்கள். வாழ்க்கைச் செலவு பல்மடங்கு அதிகரித்து இருக்கிறது. தற்போதைய ஜனாதிபதி மாக்சிச நிலைப்பாட்டில் போராட்டங்களை முன்னெடுத்து வந்தவர். தற்போது அரசியல் ரீதியாக அவர் வெற்றி பெற்றிருக்கிறார்.

எனவே அவர் முன்வைத்த தேர்தல் வாக்குறுதிகளைச் செயற்படுத்தவேண்டும் மக்கள் வாழ்க்கைச்சுமையைக் குறைத்து நாட்டை மாற்ற வேண்டும் - என்றார். (ச-20)

# யாழ். பல்கலையில் கலாசாரத் திருவிழா

யாழ்ப்பாணம், செப். 30

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பொன் விழா மற்றும் சர்வதேச சுற்றுலா தினம் ஆகியவற்றை முன்னிட்டு யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தில் உணவு மற்றும் கைப்பணிப்பொருள் சந்தை, காலாசாரத் திருவிழா என்பன கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து இரு தினங்கள் கோலாகலமாக இடம்பெற்றன.

இதன்போது பல்வேறு வகையான உணவு உற்பத்திகள், பனைசார் உற்பத்திகள், கைவினைப் பொருள்கள் என பலவிதமான உள்ளூர் உற்பத்திகளின் கண்காட்சியுடன் விற்பனைகளும் இடம் பெற்றன. பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், பல்க லைக்கழக மாணவர்கள், பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள், தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் இந்த கண்காட்சியில் கலந்துகொண்டு பொருள்களைக் கொள்வனவு செய்தனர். (ச-27)







### வவுனியா தமிழ் ம. ம. வி.

# 27 மாணவர்கள் 9 'ஏ' சித்தி

வவுனியா, செப்.30

வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய வரலாற்றில் முதற் தடவையாக 27 மாணவர்கள் 9 பாடங்களிலும் விசேட சித்தி பெற்றதாக பாடசாலையின் அதிபர் ஆ. லோகேஸ்வரன் தெரிவித்தார்.

தற்போது வெளிவந்துள்ள சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேற்றிலும் 27 மாணவர்கள் விசேட சித்திகளையும் 18 மாணவர்கள் எட்டுப்பாடங்களில் விசேட சித்தியையும் ஒரு பாடத்தில் திறமைச் சித்தியையும் பெற்று சித்தி அடைந்துள்ளதுடன் அதிகளவான மாணவர்கள் இம்முறை அனைத்து பாடங்களிலும் சித்தி அடைந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ரி-110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தலில் பெண்களுக்கும் சம ஒதுக்கீடு

நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் பெண்களுக்கு ஆசன ஒதுக்கீடு சரிசமமாகப் பகிரப்படவேண்டும் என தமிழ்த் தேசியம் சார்ந்து வடக்கு - கிழக்கில் இயங்கும் அரசியல் கட்சிகளின் பெண்கள் குழு கோரிக்கை விடுத்துள்ளது.

யாழ்ப்பாணத்திலுள்ள தனியார் விடுதியில் நேற்றுக் கலந்துரையாடலில் ஈடுபட்ட பின்னர் அவர்கள் இந்தக் கோரிக்கையை முன்வைத்தனர். (அ-ஒ-20)

# இந்திய மீனவருக்கு விளக்கமறியல்

மன்னார், செப். 30

இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன்பிடித்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட 17 இந்திய மீனவர்களையும் எதிர்வரும் 10 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க மன்னார் நீதிவான் நேற்று மாலை உத்தரவிட்டார்.

நேற்று அதிகாலை இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது இலங்கைக் கடற்படையினர் இரண்டு இந்திய இழுவைப் படகுகளையும் அதிலிருந்து 17 இந்திய மீனவர்களையும் கைது செய்தமை குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-56)

# விபத்து

கொடிகாமம், செப். 30

ஹையேஸ் வாகனமும் மகேந்திரா வாகனமும் நேருக்கு நேர் மோதியதில் ஹையேஸ் வாகனம் பலத்த சேதமடைந்துள்ளது.

இந்தச் சம்பவம் மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரிக்கு முன்பாக நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணியளவில் இடம் பெற்றுள்ளது.

யாழ்ப்பாணத்திலிருந்து கொடிகாமம் நோக்கிப் பயணித்த மகேந்திரா வாகனம் வேறு ஒரு வாகனத்தை முந்த முற்பட்டவேளை கிளிநொச்சியிலிருந்து வந்த ஹையேஸ் வாகனத்துடன் மோதியதில் விபத்து ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. விபத்தில் யாருக்கும் உயிர் சேதம் ஏற்படவில்லை. (ஒ-159)

# எங்களின் வாழ்வாதாரத்தை இராணுவம் பறிக்கிறது

**கிளிநொச்சி, செப்.30**

**இராணுவத்தினர் குறைந்த செலவில் நடத்துகின்ற அழககங்களால் தமது வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதாகவும் உடனடியாக தடுத்து நிறுத்து மாறும் வட மாகாண அழகக கூட்டுறவுச்சங்கங்க ளின் சம்மேளத்தினர் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.**

கிளிநொச்சியில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டது.

வடமாகாணத்தில் புதிய கழக சங்கங்களை அமைப்பதற்கு உள்ளூராட்சித் திணைக்களம் அனுமதி தர வேண்டும். புதிதாகப் பொறுப்பேற்றுள்ள ஜனாதிபதி தமிழ் மக்களின் நீண்ட காலப் பிரச்சினை களைத் தீர்க்க வேண்டும். புதிதாகப் பொறுப்பேற்றுள்ள வடமாகாண ஆளுநருக்கும் நன்றி கூறுவதாக அவர்கள் மேலும் தெரிவித்தனர். (ஒ-25-113)



மறைந்த ஊடகவியலாளரும், கேலிச்சித்திர கலைஞருமான அஸ்வின் சுதர்சனின் நினைவேந்தல் நிகழ்வும், தேசிய பற்றாளர் விராஜ் மெண்டிஸின் அஞ்சலி நிகழ்வும் நேற்று ஞாயிற்றுக்கிழமை யாழ். ஊடக அமையத்தில் நடைபெற்றது. (ச-20)

தங்கை மருத்துவமனையில்

# தவறான முடிவு எடுத்து சகோதரி உயிரிழப்பு

யாழ்ப்பாணம், செப். 30

தவறான முடிவு எடுத்து உயிர்மாய்க்க முற்பட்ட தங்கை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ள நிலையில் அவரின் மூத்த சகோதரி தவறான முடிவு எடுத்து உயிரிழந்துள்ளார்.

கோண்டாவிலைச் சேர்ந்த 21 வயது இளம்பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவரின் தங்கை தான் காதலித்த இளைஞருடன் சென்றுள்ளார். இரண்டு வாரங்களின் பின்னர் முரண்பாடு காரணமாக, காதலர் அந்தப் பெண்ணை பொலிஸ் நிலையத்தில் விட்டுச் சென்றுள்ளார். இதனையடுத்து அந்தப்பெண் தவறான முடிவு எடுத்து உயிர்மாய்க்க முற்பட்டார். இருப்பினும் அவரைக் காப்பாற்றி மருத்துவமனையில் சேர்த்துள்ளனர். இந்தச் செய்தியைக் கேட்ட மூத்த சகோதரி வீட்டில் தவறான முடிவு எடுத்து உயிரிழந்துள்ளார்.

இறப்பு விசாரணைகளை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-ஒ-26)

# திடீர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், செப். 30

கரவெட்டியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இளைஞர் ஒருவர் மாரடைப்புக் காரணமாகத் திடீரென உயிரிழந்துள்ளார்.

வடமராட்சி, கரவெட்டி விக்கினேஸ்ரா வீதிப் பகுதியைச் சேர்ந்த சூரியபிரபா (வயது-38) என்ற இளைஞரே இவ்வாறு உயிரிழந்தவராவார். உயிரிழந்தவரின் சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைகளுக்காகப் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. பருத்தித்துறைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ஒ-66)

# பிறப்புச் சான்றிதழ் பதிவு செய்யாதோருக்கு நடமாடும்சேவை

யாழ்ப்பாணம், செப். 30

2024 ஆம் ஆண்டுக்கான சிறுவர் தினத்தையொட்டி இதுவரை பிறப்புச் சான்றிதழைப் பதிவு செய்யாத சிறுவர்களுக்கான நடமாடும் சேவையானது நாளை செவ்வாய்க்கிழமை காலை 9 மணி தொடக்கம் பி.ப. 4 மணி வரை மாவட்டச் செயலகத்தின் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சிறுவர்களுக்கான பிறப்புச் சான்றிதழை பதிவு செய்வதற்காக உரிய ஆவணங்களுடன் வருகை தந்து பிறப்புச் சான்றிதழை பதிவு செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (அ-ஒ-இ)

## பிரத்தியேகவகுப்பு

பௌதிகவியல்: ஆங்கில, தமிழ் மூலம்
M. கருணாநிதி B.Sc (Hons), PGDE (077 618 3064)
A/L 2026, 2025 புதிய பிரிவுகள்
அலகுகள் ஆரம்பத்தில் இருந்து கற்பிக்கப்படும்
(வகுப்புகள் இரவு நேரத்தில் மாத்திரம்)
குறிப்பு: NEW SCIENCE College இல் வழமையான நேரத்தில் வகுப்புகள் நடைபெறுகின்றன
54, கலைமகள், வீதி அரியாலை

# உயிர்மாய்க்க முயன்ற பெண்; காப்பாற்றிய பொலிஸ் அதிகாரி

மன்னார், செப். 30

மன்னார் பாலத்தடியில் தவறான முடிவு எடுக்க முயன்ற பெண் ஒருவரை, மன்னார் போக்குவரத்துப் பிரிவுப் பொலிஸ் சார்ஜன்ட் மலலசேகர நேற்றுக் காப்பாற்றியுள்ளார்.

மன்னார் நகருக்குள் நுழையும் பிரதான பாலத்துக்கு அருகில் உள்ள அலுவலகத்தில் பிரதேச போக்குவரத்துப் பிரிவுக்குப் பொறுப்பான பொலிஸ் சார்ஜன்ட் பணிபுரிந்து கொண்டிருந்தபோது பெண் ஒருவர் கையில் கடிதம் போன்ற ஒன்றை எடுத்துக் கொண்டு வந்துள்ளார்.

அவர், பொலிஸ் அதிகாரியிடம் தமிழ் தெரியுமா எனக் கேட்டுள்ளார். அதற்கு சார்ஜன்ட் நீங்கள் யார்? என்று தமிழில் கேட்க அந்தப் பெண் தன் கையில் இருந்த கடிதம் மற்றும் கையடக்கத் தொலைபேசியை அவரின் மேசையில் வைத்துவிட்டு மன்னார்ப் பாலம் நோக்கி ஓடியுள்ளார்.

சம்பவத்தை அவதானித்த பொலிஸ் சார்ஜன்ட் பெண் தவறான முடிவு எடுக்கப் போவதாகச் சந்தேகித்து துரத்திச் சென்றுள்ளார். அந்தப் பெண் பாலத்தின் பாதுகாப்புச் சுவரில் ஏறிய நிலையில் அவரின் காலைப் பிடித்து பொலிஸ் சார்ஜன்ட் காப்பாற்றியுள்ளார்.

மீட்கப்பட்ட 24 வயதுடைய பெண் மன்னார் பொலி[illegible] சிறுவர் பணி[illegible] டுள்ளார். (அ-ஒ-56)

## கிருஸ்ணா அடைவுகடை
பதிவு இல J/DS/BR/472

மேற்குறிப்பிட்ட எமது ஸ்தாபனத்தில் 2023 ஆம் ஆண்டு 31.12.2023 இற்கு முன்னர் அடைவு வைத்த நகைகள் யாவற்றையும் 2024 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 31ம் திகதிக்கு (31.10.2024) முன்னர் மீட்கவும்.

மீட்க முடியாவிட்டால் ஒரு பகுதி பணத்தைக் கட்டிப் புதுப்பித்துக்கொள்ளவும். புதுப்பிக்கத் தவறின் 31.10.2024 ஆம் திகதியன்று விற்கப்படும். என்பதனை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.

(குறிப்பு :- 2023 ஆம் ஆண்டு 12 ஆம் மாதம் 31 ஆம் (2023.12.31) திகதிக்கு முற்பட்ட நகைகள்யாவும் விற்கப்படும்)

இல:- 370, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
021 490 0311, 021 222 5180
077 080 4656

உரிமையாளர்
இல: 09, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
021 222 5046

(CS/56313) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குத்துவிளக்கு...

தான் நாங்கள் அவர்களின் கூட்டில் இருந்து வெளியேறி வந்தோம் - இவ்வாறு நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

"இலங்கைத் தமிழரசுக் கட்சி, கூட்டமைப்பாக நாடாளுமன்றத் தேர்தலை எதிர்கொள்ள அழைப்பு விடுத்துள்ளது. இந்த அழைப்புத் தொடர்பில் சந்தேகம் உள்ளது. அவர்கள் கடந்த ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொதுவேட்பாளரை எதிர்த்தவர்கள். தமிழ்த் தேசியத்தை உதட்டளவில் பேசி அதனைப் பாவிக்க முயல்கின்றனரோ தெரியவில்லை.

பகிஷ்கரிப்பு அணியினர் சிங்கள வேட்பாளரை பகிஷ்கரிப்பதாகக் கூறி கடைசியில் தமிழ்த் தேசிய வேட்பாளரையும் பகிஷ்கரித்தனர். இவர்கள் யாவரும் தமிழ்த் தேசியத்துக்கு முன்னுரிமை கொடுத்து வருவதாகத் தெரியவில்லை. தனிப்பட்ட சுயநலக் காரணங்களே அவர்களை இயக்கி வருவதாக நான் உணர்கின்றேன்.

சிலர் ஒரு கட்சியின் பெயரைச் சொல்லி ஒற்றுமை ஏற்படுத்த முனையலாம். ஆனால் அவர்களின் சிந்தனை தமிழ்த் தேசியம் பாற்பட்டதா அல்லது சொந்த சுயநலம் பாற்பட்டதா என்பதை நாம் புரிந்து கொள்ளவேண்டும். அவ்வாறானவர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்து சென்றவர்கள் திரும்பி வாருங்கள் என்று கூறுவது தமிழ்த் தேசியத்துக்காக அல்ல. சுயநலக் காரணங்களுக்காகவே!

அரியநேந்திரனின் சின்னத்தைச் சிலர் தமக்குப் பெற்றவுடன் தாமும் அரியநேந்திரனாக உருமாற்றம் பெற்றுவிடப் போவதாகக் கற்பனை செய்து கொள்ளக்கூடாது. உதயசூரியனை சின்னமாக முன்பு எடுத்தவர்கள் தாம் தேர்தலில் வெற்றி பெறப் போவதாகக் கற்பனை செய்தார்கள். ஆனால் எமது தமிழ் வாக்காளர்கள் குறித்த சின்னத்தில் கேட்டவர்களையே அடையாளம் கண்டு அவர்களைப் புறக்கணித்தார்கள். சின்னத்தைப் பெற்றால் சுயநலவாதிகள் பொது நலவாதிகளாக மற்றும் தமிழ்த் தேசியப் பற்றாளர்களாக உடனே மாறிவிடுவார்கள் என்று நினைப்பது மடமை.

நாங்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் சேரும் வாய்ப்புக்கள் இல்லை. சுட்ட மண்ணும் சுடாத மண்ணும் என்றென்றும் ஒன்று சேராது. வேண்டுமெனில் தமிழ்த் தேசியத்தில் உண்மையாக ஈடுபட்டிருக்கும் தமிழ் இளைஞர்கள் பலர் எம் கட்சியான தமிழ் மக்கள் கூட்டணியில் சேர்ந்து பயணிக்க முடியும்" - என்றுள்ளது. (அ-ஓ-இ)

## தமிழரசுக்...

அவர்களின் மனநிலை இன்னமும் மாறவில்லை. இப்படியான நிலைப்பாட்டில் இருப்பவர்களுடன் எப்படி இணையமுடியும்? எனக் கேள்வி எழுப்பியுள்ளார் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் த.சித்தார்த்தன்.

தமிழீழ மக்கள் விடுதலைக்கழகத்தின் பொதுச்சபை கூட்டம் வவுனியா விருந்தினர் விடுதியில் நேற்று இடம்பெற்றது. அதன் பின்னர் அவர் ஊடகங்களுக்கு மேலும் தெரிவித்ததாவது:-

"ஒரு கட்சி மற்றைய கட்சியின் மீது ஆதிக்கம் செலுத்துவதை விடுத்து உண்மையாக கூட்டாகச் செயற்படவேண்டும். அன்று தமிழரசுக்கட்சியின் சின்னத்தில் நாங்கள் கூட்டமைப்பாகச் செயற்பட்டபோது பல பிரச்சினைகள் உருவாகியிருந்தன. கடந்த உள்ளூராட்சித் தேர்தலில் தனியாகப் போட்டியிடப்போவதாக தமிழரசுக்கட்சி முடிவெடுத்திருந்தது.

இருப்பினும் கூட்டமைப்பை விட்டு தமிழரசுக்கட்சி சென்றாலும் நாங்கள் இயங்காமல் இருக்கமாட்டோம். எனவே நாங்கள் ஜனநாயகத் தமிழ்த்தேசிய கூட்டமைப்பினூடாக உள்ளூராட்சித் தேர்தலில் வேட்புமனுவைத் தாக்கல்செய்தோம். இப்போது பல கட்சிகள் இணைந்திருக்கின்றன.

அவர்கள் தான் விட்டுச்சென்றவர்கள். எனவே அவர்கள்தான் வரவேண்டும். அனைவரும் இணைவது தமிழ்மக்களுக்கு பலமாகவும் இருக்கும்.

ஆனால் அவர்கள் தமிழரசுக் கட்சி சின்னத்திலேயே தேர்தலில் போட்டியிடமுடியும் என்று சொல்வதன் ஊடாக தமது கட்சியின் ஆதிக்கத்தையே நிலைநாட்டுகின்றார்கள். சமபங்காளிகளாக ஒரு கூட்டமைப்பாக இணைந்தால் அதில் சேரமுடியும்.

தமிழ்க்கட்சிகள் பிரிந்து நிற்பது பிரதிநிதித்துவத்தில் நிச்சயமாகத் தாக்கத்தை ஏற்படுத்தும். அதற்காகவே ஒரு கூட்டமைப்பை உருவாக்கவேண்டும் என்று பார்க்கின்றோம்" - என்றார். (அ-ஓ-110)

## பொதுச்...

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய குழுக் கூட்டம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இந்தக் கூட்டத்தில் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக கடந்த காலத்தில் இயங்கிய கட்சிகளை மீளவும் இணையுமாறு அழைப்பு விடுக்கவும், வீட்டுச் சின்னத்தில் தேர்தலை எதிர்கொள்ளவும் தீர்மானிக்கப்பட்டது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அழைப்புத் தொடர்பில் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியினர் ஆராய்ந்து வருகின்றனர்.

"தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து இலங்கைத் தமிழரசுக் கட்சியே வெளியேறியது. எனவே அவர்கள் மீளவும் வந்து கூட்டமைப்பில் இணைந்து கொள்ளலாம். பொதுச் சின்னத்தில் தேர்தலை ஒன்றாக எதிர்கொள்ளலாம்" என்று ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் தலைவர்களில் ஒருவர் தெரிவித்தார்.

அத்துடன் இலங்கைக்கான இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா, தமிழ்த் தேசியக் கட்சிகளை இன்று மாலை கொழும்பில் சந்திக்கவுள்ளார். இந்தச் சந்திப்பின்போது தமிழ்த் தேசியக் கட்சிகள் நாடாளுமன்றத் தேர்தலை ஒன்றாக எதிர்கொள்வது தொடர்பில் வலியுறுத்துவார் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதன்போது, பொதுச் சின்னத்தில் ஒன்றிணைந்து போட்டியிடலாம் என்பதையே ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியில் அங்கம் வகிக்கும் கட்சித் தலைவர்கள் வலியுறுத்துவார்கள் எனத் தெரியவருகின்றது. (அ-ஓ-5)

## தேர்தல்...

வதற்குரிய நடவடிக்கைகளை துரிதப்படுத்துமாறு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க கட்டளையிட்டுள்ளாரென தகவல்கள் தெரிவிக்கின்றன.

சட்டவிரோத மதுபானசாலைகளுக்கான அனுமதிப்பத்திர உரிமங்கள் கடந்த காலங்களில் பெரும் சர்ச்சையை தோற்றுவித்திருந்தன.

இந்த அனுமதிப்பத்திரங்கள் தொடர்பில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க ஆராய்ந்தபோது கடந்த காலங்களில் மதுவரித் திணைக்கள மேல் அதிகாரிகள் சிலருடன் கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகக் கண்டறியப்பட்டுள்ளது.

வழங்கப்பட்ட மதுபானசாலைகளுக்கான அனுமதிப் பத்திரங்களின் எண்ணிக்கை? அவை யாருக்கு வழங்கப்பட்டுள்ளன? என்பன தொடர்பான முழுமையான அறிக்கையொன்றைச் சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி கட்டளையிட்டுள்ளார்.

அதேவேளை நாட்டிலே புதிய உணவகங்களும் அரசியல்வாதிகளின் தலையீட்டில் திறக்கப்பட்டுள்ளமை தொடர்பிலும் உடன் நடவடிக்கை எடுக்குமாறும் ஜனாதிபதி பணித்துள்ளார். (அ-ச-சி)

## சங்குச் சின்னம்...

தெரியவருகின்றது. அந்தக் கூட்டணிக்கு சங்குச் சின்னம் ஒதுக்கப்படும் என்று தெரியவருகின்றது.

ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி குத்துவிளக்குச் சின்னத்தையே தேர்தல்கள் ஆணைக்குழுவில் பதிவு செய்திருந்தது. அந்தச் சின்னத்திலேயே உள்ளூராட்சித் தேர்தலிலும் வேட்புமனுத் தாக்கல் செய்திருந்தது. எனினும் அந்தத் தேர்தல் இதுவரை நடைபெறவில்லை.

இந்த நிலையில் கடந்த ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொதுக்கட்டமைப்பின் சார்பில் சுயேச்சை வேட்பாளராகக் களமிறக்கப்பட்ட அரியநேந்திரனுக்கு, சங்குச் சின்னம் ஒதுக்கப்பட்டது. அதே சின்னத்தைப் பயன்படுத்தி எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலை எதிர்கொள்வதற்கு ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி ஆராய்ந்திருந்தது. அது தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கும் கடிதம் அனுப்பியிருந்தது.

பெரும்பாலும் சங்குச் சின்னம், ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணிக்கு இன்று ஒதுக்கப்படுவது தொடர்பான உத்தியோகபூர்வ அறிவித்தல் வெளியாகலாம் எனத் தெரியவருகின்றது. (அ-ஓ-5)

## மாணவனைத்...

கல்வி நிலையத்தில் இரு மாணவர்களுக்கு இடையில் புத்தகப்பை தொடர்பான இழுபறி நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது. இதன்போது ஒரு மாணவனை அங்கு கற்பிக்கும் விஞ்ஞான பாட ஆசிரியர் தாறுமாறாக கையாலும், தடியாலும் அடித்துள்ளார்.

இது தொடர்பில் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைவாக மேற்படி ஆசிரியர் கைது செய்யப்பட்டுள்ளார். (அ-ஓ-27)

## வீட்டை...

கட்சியின் தலைவர் ந.சிறீகாந்தா தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து பல்வேறு காலகட்டங்களில் வெளியேறியவர்கள் மீண்டும் இணைய வேண்டும் என புன்முறுவலோடு சுமந்திரன் அழைப்பு விடுத்திருக்கிறார். அவருக்கு நாங்களும் புன்முறுவலோடு பதிலளிக்கக் கடமைப்பட்டுள்ளோம்.

அம்பாறை, திருகோணமலை மாவட்டங்களில் தமிழ் மக்களின் பிரதிநிதித்துவத்தை தக்கவைக்கவேண்டும் என்ற அடிப்படையில் தமிழரசுக் கட்சியோடு இணைந்து கூட்டாகச் செயற்பட ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி தயாராக உள்ளது. ஆனால் யாழ்ப்பாணம், வன்னி, மட்டக்களப்பு ஆகிய தேர்தல் மாவட்டங்களில் தமிழரசுக் கட்சியுடன் இணைந்து செயற்படுவதில் கொள்கை ரீதியாகவும், கடந்த கால அனுபவ ரீதியாகவும் பல மனஸ்தாபங்கள் உள்ளன.

தமிழரசுடன் இணையுமாறு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது எதற்காக? தமிழ்த் தேசியத்தை சிங்கள தேசியத்துடன் சமரசம் செய்துவைப்பதற்காவா? அல்லது இருக்கின்ற பதவிக் கதிரைகளைப் பறிபோகவிடாமல் தக்கவைப்பதற்காகவா? அல்லது கடந்தகாலம் போல் ஆட்சியாளர்களுடன் மறைமுக சமரசம் செய்வதற்காக? என்ற கேள்விகளை எழுப்ப வேண்டிய கட்டாயத்தில் இருக்கின்றோம். ஒற்றுமை என்பது கொள்கையுடன், குறிக்கோளுடன் இருக்க வேண்டுமானால் நாங்கள் தமிழரசுக் கட்சியில் ஆதிக்கம் செலுத்துக்கின்ற சுமந்திரன் தலைமையிலான அணியுடன் ஒருபோதும் அந்த ஒற்றுமையை ஏற்படுத்த முடியாது, ஏற்படுத்தக்கூடாது என்பதே தமிழ்த் தேசியக் கட்சியின் முடிவாகும்" - என்றார். (அ-ஓ-20-26)

## சங்குச்...

தமிழ் மக்கள் பொதுச் சபையின் கூட்டம் திருகோணமலை உப்புவெளி ஆயர் இல்ல மண்டபத்தில் நேற்று இடம்பெற்றது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் பொதுச்சபையும் தமிழ்த் தேசியக் கட்சிகளும் இணைந்து ஒரு பொதுக் கட்டமைப்பை உருவாக்கி, பொதுவேட்பாளரைக் களம் இறக்கின.

ஆனால் அதுபோல நாடாளுமன்றத் தேர்தலில் நேரடியாகத் தேர்தலில் ஈடுபடுவதில்லை என்று பொதுச்சபை முடிவு எடுத்துள்ளது. மேலும் பொதுச் சின்னமாகிய சங்குச் சின்னத்தை இத்தேர்தலில் பயன்படுத்துவதைத் தவிர்க்குமாறு பொதுக் கட்டமைப்புக்குள் உள்ள கட்சிகளிடம் கேட்பது என்றும் நேற்று முடிவெடுக்கப்பட்டுள்ளது. (அ-ஓ-26-66)

## 13,309...

அத்துடன், பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில் 2.21 வீதமானோர் எந்தவொரு பாடங்களிலும் சித்தியடையத் தவறியுள்ளனர்.

சாதாரண தரப்பரீட்சைக்கு இம்முறை 4 இலட்சத்து 52 ஆயிரத்து 979 மாணவர்கள் தோற்றி இருந்தனர். 3 ஆயிரத்து 572 பரீட்சை நிலையங்களில் பரீட்சை நடைபெற்றது.

சாதாரண தரப்பரீட்சைக்கு முதன்முறையாக தோற்றிய 3 இலட்சத்து 22 ஆயிரத்து 573 மாணவர்களில் 2 இலட்சத்து 44 ஆயிரத்து 288 பேர் உயர்தரம் கற்கத் தகுதிபெற்றுள்ளனர். (75.72 வீதம்)

சாதாரண தரப்பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் காலி சங்கமித்தா மகளிர் வித்தியாலய மாணவி முதலிடம் பிடித்துள்ளார். இரு மாணவர்கள் இரண்டாம் இடத்தையும் பிடித்துள்ளனர். (அ-ஓ-44)

## வடக்கில்...

அதேவேளை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியிலிருந்து பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில் 52 பேர் 9'ஏ' பெறுபேற்றைப் பெற்றுள்ளனர். இவர்களில் 24 பேர் ஆங்கிலமொழி மூலமும், 28 பேர் தமிழ் மொழி மூலமும் பரீட்சைக்குத் தோற்றியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ஓ-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரீட்சை மீளாய்வுகள் விண்ணப்பம் கோரல்

கொழும்பு, செப்.30

வெளியாகியுள்ள 2023 ஆம் ஆண்டுக்கான கல்விப்பொதுத் தராதர சாதாரண தரப்பரீட்சை பெறுபேறுகள் தொடர்பான மீளாய்வுக்கான விண்ணப்பங்களை எதிர்வரும் ஒக்ரோபர் முதலாம் திகதி முதல் 14 ஆம் திகதிவரை சமர்ப்பிக்கமுடியும் எனப் பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது. குறித்த பரீட்சைப் பெறுபேறுகளைப் பரீட்சைகள் திணைக்களத்தின் www.doenets.lk அல்லது www.results.exams.gov.lk என்ற இணையத்தளங்களுக்குப் பிரவேசித்து பரீட்சார்த்திகளின் சுட்டெண்களை உள்ளீடு செய்வதன் மூலம் பெற்றுக் கொள்ளமுடியும். அதேநேரம், onlineexams.gov.lk என்ற இணையத்தளம் ஊடாக, சகல அதிபர்களுக்கும், தமக்கான பயனர் பெயரைப் பயன்படுத்தி பாடசாலைகளின் பெறுபேறு அட்டவணையைத் தரவிறக்கம் செய்யமுடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-66)

**மஹிந்தவின்...**
நீக்குவதற்கு, ஜனாதிபதி அநுரகுமார உத்தரவிட்டுள்ளாரெனத் தெரிவிக்கப்படுகின்றது. அவருக்கு ஏனைய முன்னாள் ஜனாதிபதிகளைப் போன்று வழங்கப்படும் பாதுகாப்பு மாத்திரமே நேற்றிலிருந்து வழங்கப்பட்டுள்ளது. (அ-ஒ-இ)

**ஆடுகளும்...**
குட்டியும் உயிரிழந்துள்ளன. இது தொடர்பில் பூநகரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டுள்ளது. (அ-ஒ-27)


## வேலையாட்கள் தேவை

நல்லூரில் அமைந்துள்ள AGN தொலைபேசி நிலையத்திற்கு விற்பனைப்பிரதிநிதி தேவை.
சம்பளம் : 40000 - 50000
வயதெல்லை 18 - 32
AGN Mobile Center
இல 634, 636, நல்லூர், யாழ்ப்பாணம்.
077 900 2591, 021 221 2363
(CS/56337) J-1

## Techna
Technical Institute
A/L தொழினுட்பப்பிரிவு
077 170 3549 வீரசிங்கம் மண்டபம், 3ஆம் மாடி, யாழ்ப்பாணம்.

A/L 2026

03.10.2024(வியாழக்கிழமை) மாலை 3.30 மணிக்கு

- மாணவர்கள் மீது தனிப்பட்ட கவனிப்பு.
- தொடர்ச்சியாக 7 நாட்களும் வகுப்புக்கள்
- மாதாந்தப் பரீட்சை, அலகுப் பரீட்சை,
- தவணைப்பரீட்சைகள்
- களப்பயணங்களை மேற்கொள்ளல்
- அனுபவம்மிக்க ஆசிரியர்களின் வழிகாட்டல்.
- செயன்முறை பயிற்சி வகுப்புக்கள்
- பாடங்களுக்கான கையேடுகள் வழங்கப்படும்.

## Dubai in vacancy

துபாய் நாட்டின் பிரபல்யமான அரசு மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு வேலை ஆட்கள் தேவை உடனடியாக தொடர்பு கொள்ளவும்

- Rolly boy
- A/C Technician
- Clener
- Waiter
- A/C Helper
- Resturants Helper

Super Market, Hospital, Restaurants, school.

What app 076 739 1026, +94 77 236 0368, +971 55 538 2278
Email- ADubaijob@gmail.com

## வேலையாட்கள் தேவை

திருநெல்வேலி சந்தியில் உள்ள உணவகம் ஒன்றிற்கு கொத்து, றைஸ் போடத் தெரிந்தவர்களும், சமையலாளர்களும் தேவை.
அனுபவமுள்ளவர்கள் விரும்பத்தக்கது.
077 921 5457, 077 551 5943
(CS/56338) J-1

## TECHNO WORLD
தொழில்நுட்பக் கல்லூரி

இடம் - வெலிங்டன் சந்தி,
லிங்கம் கூல்பார் அருகாமை, யாழ்ப்பாணம்.

A/L தொழில்நுட்பப் பிரிவு
புதிய பிரிவு ஆரம்பம்
A/L 2026


- திகதி : 02.10.2024 புதன்கிழமை
- நேரம் : மாலை 3.30

தொடர்புகளுக்கு:
077 017 5346
(CR/43310) J-1


ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமக

## 31ஆம் நாள் நீங்கா நினைவில்

தோற்றம் 10 . 09 . 1933



மறைவு 31 . 08 . 2024

## மெய்ஞானம் மார்க்கண்டு

எங்கள் குலதெய்வம் நீழ்துயில் தான் கொண்டதுவோ
எமது தூண்டாமணி விளக்கில் நெய்தான் முடிந்து போனதுவோ
எங்கள் தலவிருட்சம் வேரறுந்து சாய்ந்ததுவே.
கருணையே வடிவான உங்கள் விழிகள் ஒளியிழந்து போனதுவோ

திரு நீறிறின் மூக்குறியும் நெற்றிதனில்
திகழ்கின்ற சந்தனத்தின் கமழும் பொட்டும்
பருநூலின் வெள்ளுடையும் சால்வைத் தோளும்
ஒரு சீற்றம் இல்லாத உவகை பேச்சும்
உள்ளத்தை வெளிக்காட்டி உணர்த்தும் பண்பும்
வருவோர்க்கு இன்னமுதம் வழங்கும் கையும்

காந்தமாய் மற்றவரைக் கவரும் பேச்சும்
கருமமதை சமூகத்திற்கு காட்டும் பண்பும் கொண்டு
சான்றோனாய் வாழ்ந்திட்டார்.. மார்க்கண்டு மாமா
ஏந்தலே உம்முடைய வாழ்வே போதும்
இருப்போற்க்கு இதுவே நல்ல பாடமாகும்
மாந்தரிலே மரித்த பின்பும் வாழ்வோர் பேற்றில்
மாகத்தான் இடமுண்டு மறுப்பாரில்லை

கருணை உள்ளம் கொண்டவரோ சமூகம்
உம்மை கல்லறையாய் கவுமையா
நாட்டில் உள்ளோர் நலம் பேணும் வாழ்வுக்காய்
மாட்டுழவும் வண்டியுமாய் இம்மண்ணில் வாழ்ந்து
மக்களுக்கு உணவளித்து தாகம் தீர்த்தீர்
தியாகமுடன் அன்பளித்து நின்றீர் மாமா

கேட்டாலும் கிடைக்காத மரண வாழ்வு
கிடைத்துவே உந்தனுக்கு கிடைக்கப் பேராய்
மாமா உங்கள் திருமுகம் இனி எங்கு காண்போம்
உங்கள் ஆத்மா சாந்தி அடைய இறைவனை வேண்டுகின்றேன்.
ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

என்றும் உங்கள் நினைவுகளுடன்
மருமகன் - ஜெயக்குமார்
ஆர்.கே.ஜே. நகையகம்

முருங்கன், மன்னார்.

(CS/29051) J-1

## மரண அறிவித்தல்

பிறப்பு 21 . 02 . 1948



இறப்பு 28 . 09 . 2024

### ஞானேஸ்வரன் உமாராணி

இணுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும், சுதுமலை மத்தியை வசிப்பிடமாகவும் கொண்ட உமாராணி ஞானேஸ்வரன் அவர்கள் நேற்று முன்தினம் (28.09.2024) சனிக்கிழமை இரவு 9.00 மணியளவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை - இந்திராணி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான மூத்ததம்பி - தையல்நாயகி தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற ஞானேஸ்வரனின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற ரகுநாதன், மற்றும் ஜெயதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற பாக்கியவதி மற்றும் சிவபாதசுந்தரம் ஆகியோரின் மைத்துனியும், நரேந்திரம் (முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் - யாழ் மாநகரசபை), சர்வேஸ்வரன் (மின்சார சபை ஊழியர் களஞ்சியசாலை - சுன்னாகம்), சக்திதரன் (கொ/ இந்துக்கல்லூரி பௌதிகவியல் ஆசிரியர்) ஆகியோரின் அன்புத் தாயாரும், சுபா உமா, தர்மிகா ஆகியோரின் மாமியாரும், தேவனா, அக்ஷன்னா, அக்ஷயா, அக்ஷரன் மற்றும் ரினுஷ்கா ஆகியோரின் பேர்த்தியும், ரபோனி, மங்களரூபிணி, ஜெயசக்தி ஆகியோரின் சின்ன மாமியும், உருத்திரா, சிவப்பிரியா ஆகியோரின் சிறியதாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.09.2024) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் சுதுமலை மத்தியில் உள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்
நரேந்திரம் - 076 931 8661
சர்வேஸ்வரன் - 076 458 0600

சுதுமலை,
மானிப்பாய்.

(CS/29015) J-1



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 30.09.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org